சிறுவர் கதைகள்

# மாயக் கண்ணாடி

உதயசங்கர்

# பொருளடக்கம்


அதிகாரத்தைப் பகடி செய்ய...

1. புதிய அகராதி
2. காற்றில் கரைந்த பூதம்
3. தொலைந்து போன மழைவிதைகள்
4. பிரம்படி வைத்தியம்
5. ஜங்க் ஃபுட் தேசம்
6. மாயக்கண்ணாடி
7. போக்குவரத்தில் குழப்பம்
8. காற்று பிரியாத கதை
9. காணாமல் போன சொற்கள்
10. மறந்த சிரிப்பு
11. பறவைகள் பறந்து போய் விட்டன

# அதிகாரத்தைப் பகடி செய்ய...

குழந்தைகள் வாசிப்பதற்காக நான் எழுதிய பூனை குறுக்கே போனா? என்ற கட்டுரையை என்னுடைய வலைப்பூவில் பிரசுரித்திருந்தேன். அதற்கு குழந்தைகள் இலக்கியம் என்று பெயரிட்டிருந்தேன். அதை வாசித்த ஒரு வாசகர் இது குழந்தை இலக்கியமா? என்று கேள்வி கேட்டிருந்தார். யோசித்துப்பார்த்தால் அதில் நியாயமும் இருக்கிறது.

ஏனெனில் ஆங்கிலத்தில் சில்ட்ரன்ஸ் லிட்டேரேச்சர் என்ற ஒரே பதத்தில் ஐந்து வயதுக்கு உட்பட்ட, ஐந்திலிருந்து பத்து வயதுக் குட்பட்ட, பத்திலிருந்து வளரிளம் பருவத்து சிறார் வரைக்குமான அனைத்து வயது குழந்தைகளுக்குமான இலக்கியத்தை குறிப்பிட்டு விடுகிறார்கள். ஆனால் தமிழில் பொதுவாக எல்லோரும் குழந்தை இலக்கியம் என்ற ஒரே பதத்தில் குறிப்பிடும்போது வாசகருக்குச் சந்தேகம் ஏற்படுகிறது.

ஏனெனில் நமது பொதுப்புத்தியில் பத்து வயதுக்குட்பட்டவர்களை மட்டுமே குழந்தைகள் என்று சொல்கிறோம். பத்து வயதுக்கும் மேல் வளரிளம் பருவத்தில் உள்ளவர்களை சிறுவர் அல்லது சிறார் என்றே சொல்கிறோம். அப்படியானால் பத்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான கதைகளும், கட்டுரைகளும் குழந்தை இலக்கிய வகைப்பாட்டுக்குள்ளும், பத்து வயதுக்கு மேல் வளரிளம் பருவம் வரையிலான சிறுவர்களுக்கான கதைகளும், கட்டுரைகளும் சிறுவர் இலக்கியம் என்ற வகைப்பாட்டிற்குள்ளும் வரவேண்டும்.

எல்லாக் கதைகளையும் எல்லாக் கட்டுரைகளையும் குழந்தை இலக்கியம் என்ற வகைப்பாட்டில் கொண்டு வரும்போது எல்லோருக்கும் குழப்பம் வருவதற்கு வாய்ப்பிருக்கிறது.

பத்து வயதுக்குட்பட்ட குழந்தையின் உளவியலில் நம்ப முடியாத கற்பனைகளும், அதிசயங்களும் அற்புதங்களும் இன்பத்தை ஏற்படுத்துகின்றன. கிளர்ச்சியடைய வைக்கின்றன. மனதில் திருப்தியை ஏற்படுத்துகின்றன. குழந்தைகளின் படைப்பூக்கத்தைத் (Creativity) தூண்டி விடுகின்றன. குழந்தைகளின் தனித்துவமான ஆளுமைக்கு அஸ்திவாரம் போடுகின்றன.

வண்ணங்களும், விசித்திரமான, கோமாளித்தனமான, நம்பமுடியாத, கதாபாத்திரங்களும் கதைகளும் குழந்தையின் உணர்வு உலகை விரிக்கின்றன. குழந்தைகள் யதார்த்தத்தில் போலச்செய்வதின் மூலம் தன் படைப்புணர்வை வெளிப்படுத்துகின்றன. அந்தக் கதைகளில் உள்ள கருத்துகளும், அறவிழுமியங்களும் குழந்தைகளின் ஆழ்மனதில் மறைமுகமான கல்வெட்டாய் பதிந்து விடுகின்றன.

பத்து வயதிலிருந்து தர்க்க அறிவு முளைவிடத்தொடங்கிறது. அது வரை உணர்ச்சிமயமாக இருந்த குழந்தைகள் இப்போது தங்களுடைய அறிவு முளைவிடுவதைப் பார்க்கின்றனர். கொஞ்சம் கொஞ்சமாக அறிவின் துணையுடன் எல்லாவற்றையும் புரிந்து கொள்ளத் தொடங்குகின்றனர்.

உலகைப்பற்றி, சமூகம்பற்றி, வாழ்க்கையைப் பற்றி, தனக்கு நேரும் அநுபவங்களைப் பற்றி நல்லது கெட்டது பற்றி கருத்துகளை உருவாக்கத் தொடங்குகின்றனர். வாழ்க்கை, சமூகம், உறவுகள், இவற்றிலுள்ள நுண்

அரசியலைப் புரிந்து கொள்ளத்தொடங்குகின்றனர். உடலும் உள்ளமும் உரம் பெறும் பதினைந்து வயதில் தன்னைப் பற்றிய தன்னுணர்வு அதிகமாகிறது.

அதுவரை யாரையாவது சார்ந்தே இருந்த குழந்தை தன்னை ஒரு தனிமனிதனாக, தனித்துவமுள்ளவனாக உணரத்தொடங்குகிறது. அந்தத் தன்னுணர்வு சாகசத்தையும், சவால்களையும், சாதனைகளையும் எதிர்கொள்ளும் துணிவைத் தருகின்றன. அதற்கேற்ற கதைகளையும், படைப்புகளையும் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

அதிகாரம் மோசமானது. அதிலும் அளவற்ற அதிகாரம் மிகமிக மோசமானது. இந்த உலகம் அதிகாரத்தின் படிநிலைகளால் கட்டப்பட்டிருக்கிறது. அரசு, சமூகம், குடும்பம் அனைத்திலுமே அதிகாரம் நிரம்பிவழிகிறது. அதிகாரத்தைப் பற்றிய உணர்வின்றி எல்லோரையும் அதிகாரம் செய்ய வைக்கிற நுட்பம் அதிகாரத்துக்கு இருக்கிறது. அதிகாரத்தின் மீதான பேரவா எல்லோர் மனதிலும் ஊற்று நீரென பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருக்கிறது. அதிகாரத்தின் மூலம் எல்லாவற்றையும் சாதிக்க முடியும் என்ற எண்ணம் குழந்தைப் பருவத்திலிருந்தே குழந்தைகளுக்குக் கற்பிக்கப்படுகிறது அல்லது உணர்த்தப்படுகிறது.

பிறந்தவுடன் குழந்தைக்குத் தாயிடமிருந்து கிடைக்கும் அன்பு குழந்தை எதிர்கொள்ளும் முதல் நல்லுணர்வு. என்றால் அதற்கு நேரெதிரான தீய உணர்வாக அதிகாரத்தின் கொடுக்குகளால் கொட்டப்பட்டுக் கொண்டிருப்பது தான். சார்ந்து இருப்பதினாலேயே அதிகாரத்துக்குக் கீழ்ப்படிவது என்பது சின்னஞ்சிறு பருவத்திலேயே தொடங்கி விடுகிறது.

அந்தக் குழந்தைப் பருவத்திலிருந்தே எல்லா இடங்களிலும், எப்போதும், ஏதாவது ஒரு வகையில் அதிகாரத்தின் கோமாளித் தனங்களையும், கொடூரங்களையும் அநுபவிப்பவர்களாக ஆகின்றார்கள். இதைச் செய்யாதே, இதைச் செய் என்று அதிகாரம் ஆணையிட்டுக் கொண்டேயிருக்கிறது.

பெற்றோர்கள், ஆசிரியர்கள், உறவினர்கள், வயது மூத்தவர்கள், போவோர், வருவோர், எல்லோரும் குழந்தைகள் மீது அதிகாரம் செலுத்துகிறார்கள். கெடுவாய்ப்பு என்னவென்றால் இதை குழந்தைகளை நல்வழிப்படுத்துவதற்காகச் செய்கிறோம் என்று சொல்லிக்கொள்கிறார்கள்.

ஆனால் உண்மையில் நடப்பது என்னவென்றால் குழந்தைகள் தங்களிடம் உள்ள இயல்பான படைப்பூக்கத்தினால் இந்த அதிகாரத்தைப் பகிடி செய்கிறார்கள். வக்கணை செய்கிறார்கள். அதிகாரமே வெட்கப்படும் அளவுக்கு அவர்கள் கேலி செய்கிறார்கள்.

மாயக்கண்ணாடி தொகுப்பிலுள்ள கதைகள் சிறுவர்களுக்கான கதைகள். அதிகாரத்தின் கோமாளித்தனங்களைப் பற்றிய கதைகள். அதிகாரம் பற்றிய நுண்ணுணர்வினை குழந்தைகளுக்குச் சொல்ல முயற்சிக்கிற கதைகள். அதன் மூலம் அதிகாரத்தின் மீதான விழிப்புணர்வை ஏற்படுத்த யத்தனிக்கும் கதைகள். அந்த விழிப்புணர்வே அன்பெனும் பெருநதியில் குழந்தைகள் எப்போதும் மூழ்கித் திளைக்க வைக்கும் என்ற நம்பிக்கையில் எழுதப்பட்ட கதைகள்.

இந்தத் தொகுப்பிலுள்ள பெரும்பாலான கதைகளை தமிழ் இந்து இணைப்பிதழான மாயாபஜாரில் வெளியிட்ட திரு. ஆதிவள்ளியப்பன்,

*மிகக்குறைந்த கால அவகாசத்தில் அற்புதமாக ஓவியங்கள் வரைந்து கொடுத்த ஓவியர் பிள்ளை, அதிசயமான அட்டையை வடிவமைத்து பதிப்பிக்கும் நூல்வனம் பதிப்பாளர் என் அன்புத்தம்பி மணிகண்டன், அனைவருக்கும் என் நன்றி!*

**வாழ்த்துகளுடன்**

**உதயசங்கர்**

**29.05.16**

# 1. புதிய அகராதி

மண்டியா தேசத்து ராஜா ஒரு குண்டக்க மண்டக்க ஆள். அவர் நினைப்பது போலத்தான் மண்டியா தேசத்து மக்களும் நடக்க வேண்டும். பாவம் மக்கள். மண்டு ராஜா அரசு அலுவல்கள் எதையும் பார்ப்பதில்லை. அதில் அவருக்கு விருப்பம் கிடையாது.

அவருக்கு மிகவும் பிடித்தது இரண்டு விஷயங்கள் தான். வயிறு புடைக்கத் தின்பார். நேரங்காலம் தெரியாமல் தூங்குவார். அவர் விடுகின்ற குறட்டையில் அரண்மனையே அதிரும். சிலநேரம் மதியம் தூங்கி மறுநாள் காலையில் எழுந்திரிப்பதும் நடக்கும். அதிலொன்றும் விசேஷமில்லை. ஆனால் காலையில் எழுந்து சாயந்திரம் எழுந்தது மாதிரியே நடந்து கொள்வார். பகலில் அரண்மனையில் விளக்கேற்றச் சொல்வார். காலை பத்து மணியை இரவு பத்து மணியென்று நினைத்து மறுபடியும் தூங்கப் போய் விடுவார்.

சிலசமயம் இப்படியே ஒரு வாரம் வரை கூட இரவும் பகலும் மண்டு ராஜாவுக்கு மாறிவிடும்.

அதனால் என்ன என்கிறீர்களா? அவருக்கு மாறி விட்டதென்றால் மண்டியா தேசத்துக்கே மாற வேண்டும். அதான் பிரச்னை. மண்டு ராஜா ஏதாவதொரு நாள் ஏதாவதொரு காலப்பொருத்தத்தில் மறுபடியும் சரியான சுழற்சியில் வரும்வரை மண்டியா மக்களும் பகலில் தூங்கி இரவில் விழித்திருக்க வேண்டும்.

இப்பேர்ப்பட்ட மண்டு ராஜாவைப் பார்க்க அரண்மனைக்கு ஒரு நாள் மத்தியானம் ஒரு செந்நாப்புலவர் வந்தார். அப்போது தான் ராஜா சாப்பிட்டு முடித்து ஏப்பம் விட்டுக் கொண்டிருந்தார். பின்பு ஒரு ஒரு கவுளி வெத்திலையை அரைத்துத் தள்ளிக்கொண்டிருந்தார். செந்நாப்புலவரோ எப்படியாவது மண்டு ராஜாவிடம் தன் மொழிப்புலமையெல்லாம் காட்டி ஏராளமான வெகுமதிகள் வாங்கிச் செல்லலாம் என்று ஆசைப்பட்டார். அதனால் ராஜாவைப் பார்த்து,




“பானை வயிறோனே

யானை நடையழகா

அறிவிற் சிறந்த அமுதோனே

அழகிற் சிறந்த அழகனே”

இப்படி ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தார் புலவர். ராஜாவுக்கோ தூக்கம் வந்து விட்டது. அதோடு அவருடைய அழகைப் பற்றியும், அறிவைப் பற்றியும் அவருக்கு யாரும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. எனவே செந்நாப்புலவர் புளுகுமூட்டையை அவிழ்த்து விடுகிறார் என்றும் கிண்டல் செய்கிறார் என்று நினைத்து விட்டார். உடனே கோபம் வந்து விட்டது. அவ்வளவுதான் ராஜாவை கேலி செய்ததற்காக செந்நாப்புலவருக்கு நூறு கசையடி கொடுக்க சொன்னார். அத்துடன் இப்போது இருக்கிற மொழி அகராதியை மாற்றி எழுதிக் கொடுக்க

வேண்டும். அப்படிக் கொடுக்க வில்லையென்றால் அவருடைய தலையை சீவி விடும் படியும் ஆணையிட்டார்.

பாவம் செந்நாப்புலவர்! கெஞ்சிக் கதறி கசையடியிலிருந்து தப்பித்துக் கொண்டார். ஆனால் அகராதி எழுத வேண்டுமே. என்ன செய்ய? ஒரு முடிவு செய்தார்.

முட்டாள் என்றால் அறிவாளி என்று மாற்றினார். வருகிறேன் என்றால் வரமாட்டேன் என்று மாற்றினார். இப்படி எல்லாவற்றையும் நேர் எதிராக மாற்றி எழுதி ராஜா கையில் கொடுத்து விட்டு மண்டியா தேசத்தை விட்டு ஓடியே போய் விட்டார்.

பொழுது போகாமல் இருந்த ராஜாவுக்கு இந்த அகராதி ரெம்பப் பிடித்துப் போய் விட்டது. உடனே நாட்டு மக்களுக்கு இந்த அகராதிப்படியே இனி பேசவேண்டும். எழுதவேண்டும் என்று ஆணையிட்டார். மன்னர் ஆணையாச்சே மீற முடியுமா? எல்லோரும் பள்ளிக்கூடம், வீடு, கடை, சாலை, எல்லாவற்றிலும் புதிய அகராதிப்படியே எல்லாம் மாற்றப்பட்டது. எப்படி?



வா என்று கூப்பிட்டால் போய் விடவேண்டும். போ என்று சொன்னால் வர வேண்டும். அதே போல தா என்றால் தரக்கூடாது. தராதே என்றால் தர வேண்டும். வேண்டும் என்றால் வேண்டாம் என்று அர்த்தம். வேண்டாம் என்றால் வேண்டும் என்று அர்த்தம்.

மக்கள் குழம்பிப் போனார்கள். வீட்டுக்கு வந்த விருந்தாளிகளை வாங்க என்று சொன்னால் அவர்கள் கோபித்துக் கொண்டு போய் விட்டார்கள். கடைகளில் பொருள் வேண்டும் என்று சொன்னால் வேண்டாம் என்று நினைத்து தரவில்லை. வேண்டாம் என்று சொன்னதையே தந்தார்கள்.

ராஜாவுக்கு ஜாலியாக இருந்தது. தினசரி அரண்மனை வேலையாட்களிடம் இந்தப் புதிய அகராதி விளையாட்டை விளையாடினார். அவர்கள் குழம்பிப் போய் ராஜா அழைத்தால் போவதா இல்லையா அழைக்காமலிருந்தால் அவரிடம் போய் நிற்க வேண்டுமா என்று புரியாமல் ராஜாவையேச் சுற்றிக் கொண்டிருந்தார்கள். நாடே குழம்பிப் போயிருந்தது.

இந்த நேரத்தில் அருகிலிருந்த பிங்கிஸ்தான் நாட்டு ராஜா மண்டியா தேசத்தின் மீது போர் தொடுக்கப்போவதாக ஓலை அனுப்பியிருந்தார். மண்டியா தேசத்து ராஜா பயந்தாங்குளி அதுவும் போர் என்றால் அவ்வளவு தான். உடனே மந்திரியிடம் பதில் அனுப்பச் சொன்னார். மந்திரியும் பிங்கிஸ்தான் நாட்டுக்கு மண்டியா தேசத்து புதிய அகராதியின் படி ஓலை அனுப்பினார்.

“நாங்கள் பலசாலி. போருக்குத் தயாராக இருக்கிறோம். உங்கள் நாட்டுக்குக் கப்பம் கட்ட மாட்டோம். நீ ஒரு கோழை. போருக்கு வா...”

அவர் எழுதிய ஓலையைப் படித்த பிங்கிஸ்தான் ராஜாவுக்கு கோபம் தலைக்கேறியது. பிங்கிஸ்தானில் போர்முரசு கொட்டியது. பிங்கிஸ்தான் ராஜா மாண்டியாவின் மேல் படையெடுத்து வந்தார்.

அப்புறம் என்ன நடந்தது தெரியுமா?

மண்டியா தேசம் பிங்கிஸ்தானிடம் சரணடைந்தது. அப்போது தான் தெரிந்தது ஓலையின் புதிய மொழி அகராதி விவகாரம். மொழிபெயர்ப்பாளர் சொன்னார்.



“நாங்கள் பலவீனமானவர்கள். போருக்குத் தயாராக இல்லை. உங்கள் நாட்டுக்குக் கப்பம் கட்டி விடுகிறோம். நீ ஒரு பலசாலி. போருக்கு வர வேண்டாம்...”

பிங்கிஸ்தான் ராஜாவும் அந்த நாட்டு மக்களும் சிரிக்கிற சத்தம் கேட்கிறதா?

# 2. காற்றில் கரைந்த பூதம்

பூதலூர் தேசத்து ராஜா மத்தியானம் தன் யானை வயிறு நிறைய பலகாரங்களும் பட்சணங்களும் சாப்பிட்டு முடித்து இரண்டு மணி ஆலைச் சங்கு போல பெரிய ஏப்பத்தை வெளியிட்டார். அந்த ஏப்பக்காற்று அவர் என்னென்ன பலகாரங்களைச் சாப்பிட்டார் என்று நாட்டு மக்கள் அனைவரிடமும் சொல்லிக் கொண்டே சென்றது. பின்னர் ஒரு கவுளி வெத்திலையை ஆடு தழையை மென்று தள்ளுவதைப்போல அரைத்துத் தள்ளினார். அதன்பிறகு அரண்மனை அதிர குறட்டை விட்டபடி தூங்குவார். தூங்குவது, சாப்பிடுவது, திரும்பவும் தூங்குவது, சாப்பிடுவது என்று விடாமல் செய்து கொண்டிருந்ததால் ராஜா குண்டாகி விட்டார்.

அதோடு ராஜா படு சோம்பேறி வேறு. அவர் நடக்க வேண்டுமென்றால் அவருடைய வலது காலைத் தூக்கி வைக்க ரெண்டு பேர் வலது பக்கம் இருப்பார்கள். அதேபோல இடது காலை தூக்கி வைக்க இடது பக்கம் ரெண்டு பேர் இருப்பார்கள். சிம்மாசனத்தில் உட்கார வேண்டுமென்றால் நாலு பேர் அவரைத் தூக்கி சிம்மாசனத்தில் உட்கார வைப்பார்கள். உடலுழைப்பு இல்லாததினால் உடலில் கொழுப்பு சேர்ந்து கொழுப்பு கட்டிகள் அங்கங்கே



உண்டாகி விட்டன. ராஜா அரண்மனை வைத்தியர்களை அழைத்து உடனே இந்தக் கட்டிகள் கரைய மருந்துகள் கண்டுபிடிக்கும்படி ஆணையிட்டார்.

அரண்மனை வைத்தியர்களுக்குத் தெரிந்துவிட்டது. ராஜா ஒரு உணவுப்பிரியர். அவரை உண்ணாவிரதம் இருக்கச் சொல்ல முடியாது. எனவே ஒருவார காலம் ஆலோசித்தனர். பின்னர் ராஜாவிடம் வந்து,

"மன்னர் மன்னா... உங்கள் உடலில் வந்துள்ள இந்தக் கட்டிகள் கொழுப்புபூதம் உங்கள் உடலில் புகுந்திருப்பதினால் தான் வந்திருக்கின்றன. எனவே இந்தப் பூதத்தை விரட்ட ஒரே ஒரு வழி தான் இருக்கிறது. சாப்பாட்டின் வழியே உங்கள் உடலுக்குள்ளே புகுந்துள்ள இந்தப் பூதத்தை சாப்பாட்டின் வழியே தான் விரட்ட முடியும். நீங்கள் ஒரு மூன்று மாதங்களுக்கு தினம் மூன்று வேளையும் நீராகாரமும், பழங்களும் மட்டும் சாப்பிட வேண்டும். அத்துடன் நாங்கள் தருகிற இந்த மருந்தை தினம் மூன்று வேளையும் சாப்பிட வேண்டும்."

இதைக் கேட்டதும் ராஜாவுக்கு திடுக்கென்றது.

"என்ன. நெய்யில் பொரித்த ஜாங்கிரியும், லட்டு, சிலேபி, பலகாரங்கள், சாப்பிடக்கூடாதா... கோழியும், ஆடும்.. சாப்பிடாமல் எப்படி என்னால் இருக்க முடியும்? இல்லை வைத்தியர்களே... வேறு ஏதாவது வைத்தியம் சொல்லுங்கள்."

"இல்லை மன்னா... இன்னொரு வைத்தியம் இருக்கிறது.. அதை நீங்கள் செய்ய முடியுமா என்று எங்களுக்குச் சந்தேகம்."

"என்ன அது.."

“தூங்கி எழுந்தவுடன் பல் விளக்காமல் நாங்கள் தரும் மருந்தைச் சாப்பிட்டு விட்டு ஒரு பத்து மைல் தூரம் ஓடிப் போய் வர வேண்டும்… அவ்வளவு தான் மன்னா.”



“என்னது… பத்து மைலா… என்னால முடியாது… என்னால முடியாது… எதுவும் வேண்டாம் நான் இப்படியே இருந்து விட்டுப் போகிறேன்.”

“இல்லை மன்னா இப்போது உங்கள் உடலில் புகுந்துள்ள கொழுப்பு பூதம் வளர்ந்து வளர்ந்து உங்களையேச் சாப்பிட்டு விடும்… இப்போதே இதை விரட்டி விடுவது நல்லது.”

ராஜா யோசித்தார். யோசித்தார். யோசித்தார்.

நடப்பதற்கே சோம்பேறியான ராஜாவா பத்து மைல் ஓடுவார்? கடைசியில் ராஜா முதலில் சொன்ன வைத்திய முறைக்கே ஒத்துக் கொண்டார். மறுநாளிலிருந்து அரண்மனை முழுவதும் மூன்று வேளையும் நீராகாரமும் பழங்களும் தான் எல்லோருக்கும் சாப்பாடு. அது போக கொள்ளுப்பயறும் கருப்பட்டியும் சேர்த்து செய்த மருந்தையும் கொடுத்தார்கள் அரண்மனை வைத்தியர்கள்.

மூன்று மாதங்களில் ராஜாவின் உடலில் இருந்த கொழுப்பு பூதம் காற்றில் கரைந்து விட்டது. இப்போதும் ராஜா நடப்பதில்லை. ஆனால் ஓடுகிறார். எல்லோரும் அவர் பின்னால் ஓடிக் கொண்டேயிருக்கிறார்கள்.

# 3. தொலைந்து போன மழைவிதைகள்

அது ஒரு கடுமையான கோடை காலம். காட்டூர் தேசத்தில் வெயில் கொளுத்தியது. ராஜாவுக்கு அரண்மனையில் இருக்க முடியவில்லை. இட்லிக்கொப்பரையில் வைத்து அவிப்பது போலிருந்தது. ராஜாவின் பெரிய்ய உடம்பு வியர்த்து ஒழுகியது. அவர் மதிய விருந்துக்குப் பின்னர் ஒரு தூக்கம் போடுவார். வெக்கையினால் தூங்க முடியவில்லை. எத்தனை பேர் சாமரம் வீசினாலும் அவருடைய வியர்வை அடங்கவில்லை.

அவர் மெல்ல எழுந்து அரண்மனை நந்தவனத்துக்குள் நடந்தார். எப்போதும் வெள்ளைப் பட்டாடையே உடுத்துவார் ராஜா. அவர் நந்தவனத்தில் உலா வரும்போது ஒரு பெரிய ஆலமரத்தின் அடியில் நிழலுக்காக நின்றார். அப்போது மரத்தில் இருந்து காய்ந்த சிறுகிளை ஒன்று ராஜாவின் மீது விழுந்து விட்டது. ராஜா ஏதோ பெரிய பாறாங்கல்லே தன் தலை மீது விழுந்து விட்டதைப் போல மயங்கி விழுந்து விட்டார்.



உடனே அரண்மனை வைத்தியர்கள் ஓடி வந்து அவரை மயக்கம் தெளிவித்தார்கள். மயக்கம் தெளிந்து எழுந்த ராஜா தன் மீது விழுந்தது மரத்தின் சிறுகிளை

தான் என்று தெரிந்து கொண்டார். ஏற்கனவே வியர்வைப் புழுக்கத்தினால் எரிச்சலில் இருந்த ராஜா கோபமாய் கத்தினார்.

"உடனே எல்லா மரங்களையும் வெட்டுங்கள்.. ஒரு மரம் இருக்கக்கூடாது... மரம் இருந்தால் தானே கிளைகள் இலைகள் கீழே விழும். மரங்கள் இல்லைன்னா எப்படி விழும் என்று பார்க்கிறேன்..."



அவருடைய மந்திரிசபையில் இருந்த மந்திரிகள் பலர் காடுகளில் கள்ளத்தனமாய் மரங்களை வெட்டி வேற்று தேசத்தில் விற்பனை செய்து சொத்து சேர்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு ராஜாவின் இந்த ஆணை தேன் குடித்த குரங்குகளின் சேட்டை போலாகி விட்டது. காட்டூர் நாட்டில் ஒரு மரத்தைக் கூட விடாமல் வெட்டித்தள்ளினார்கள்.

ராஜாவிடம் குடிமக்கள் வந்து கெஞ்சினார்கள். வேண்டினார்கள்.

மரங்கள் இல்லையென்றால் மழை இருக்காது... ராஜாவே...

மழை இல்லையென்றால் பயிர் வளராது ராஜாவே...

பயிர் வளரவில்லையென்றால் உணவிருக்காது ராஜாவே...

உணவில்லையென்றால் பஞ்சம் வரும் ராஜாவே...

என்று கூக்குரலிட்டார்கள். ஆனால் ராஜா கொஞ்சம் கூட மனம் இரங்கவில்லை. காட்டூர் தேசத்தில் ஒரு மரம் கூட இல்லை. ஒரு செடிகொடி கூட இல்லை. பாலைவனம் போல காய்ந்து வறண்டிருந்தது.

மரங்களோ, செடிகளோ, இல்லாததால் ஒரு பறவை கூட காட்டூர் தேசத்து வானத்தில் பறக்க வில்லை. மரங்களோ, செடிகளோ, பறவைகளோ, இல்லாததினால் மேகங்கள் இல்லை. மேகங்கள் இல்லாததினால் மழை இல்லை.

மழை ஒரு துளிகூட பெய்யாததினால் நிலத்தில் விளைச்சலில்லை. குடிமக்கள் பிழைப்புக்காக வேறு தேசங்களை நோக்கி பயணம் போனார்கள். இப்போது நாட்டில் மக்களுமில்லை.

காட்டூர் தேசத்தில் ராஜாவும் அவருடைய அரண்மனையும் மட்டுமே இருந்தனர். மரங்களை வெட்டிச் சம்பாதித்த மந்திரிகள் எல்லோரும் வேறு நாடுகளுக்குத் தங்கள் சொத்துகளுடன் ஓடிப் போய் விட்டனர். இப்போது ராஜாவின் அருகில் அவரை வளர்த்த வயதான சேவகர் மட்டுமே இருந்தார். ராஜாவுக்கு தான் செய்த தவறு என்ன என்று புரிந்தது. அவர் தன் தவறை உணர்ந்து அழுதார்.

அவர் அழுவதைப் பார்த்த சேவகர் "ராஜா இப்போது மனம் மாறி விட்டீர்கள். இனிக் கவலைப்பட வேண்டாம்... நான் மழைவிதைகளை என் வீட்டில் வைத்திருக்கிறேன்... நாடெங்கும் அதை விதைத்தால் போதும்... நாடு செழிக்கும்.." என்று சொன்னார்.

அதற்கு ராஜா, " என்ன மழை விதைகளா?" என்று கேட்டார்.

அதற்கு அந்த வயதான சேவகர், "ஆமாம் ராஜா எல்லா மரம் செடி கொடிகளின் விதைகளைப் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன்... அவை தான் மழை விதைகள்."

நாடெங்கும் மழை விதைகள் விதைக்கப்பட்டன. இப்போது காட்டூர் தேசத்தில் மரங்களும் செடிகளும் கொடிகளும் வளர்ந்தன. பறவைகள் கானமிசைத்தன. அந்த கானத்தைக் கேட்க மேகங்கள் கூடின. மழை பொழிந்தது. நாடு செழித்தது.

# 4. பிரம்படி வைத்தியம்

பிரம்பூர் நாட்டை பிரம்புராஜா ஆட்சி செய்து வந்தான். அவனுடைய நாட்டில் மக்கள் பயந்து நடுங்கி வாழ்ந்தார்கள். ஏன் தெரியுமா? யார் என்ன தப்பு செய்தாலும் அவர்களுக்குப் பிரம்படி தான். அதுவும் ஐம்பது! நூறு! அதற்குக் குறைந்து கிடையாது.

அரசு அலுவலக அதிகாரிகள், காவல்துறை காவலர்கள், நீதிபதிகள், அரண்மனை அதிகாரிகள் என்று எல்லோரும் கையில் பிரம்புடனே அலைந்தார்கள். முதலில் தப்பு செய்தால் மட்டும் பிரம்படி என்று பிரம்புராஜா சட்டம் போட்டிருந்தான். அப்புறம் அது கொஞ்சம் கொஞ்சமாக மாறி விட்டது. பிரம்பு வைத்திருப்பவருக்குப் பிடிக்கவில்லையென்றால் போதும் உடனே பிரம்படி கொடுக்கலாம் என்கிற மாதிரி மாறிவிட்டது. பிரம்புகளுக்காக பிரம்புக்காடு ஒன்று அந்த நாட்டில் வளர்க்கப்பட்டது.

தர்பாரில் உட்கார்ந்திருக்கும்போது திடீரென்று பிரம்பு ராஜாவுக்கு போரடித்தது என்றால் காவலரிடம் "போய் ரெண்டு பேரைப் பிடிச்சிட்டு வா.." என்று சொல்வான்.

உடனே காவலர்களும் சாலையில் சும்மா போய்க் கொண்டிருந்த ரெண்டுபேரை இழுத்துக் கொண்டு வருவார்கள்.

பிரம்புராஜா உடனே, "காவலர்களே இவர்கள் என்ன தப்பு செய்தார்கள்?" என்று கேட்பான். காவலர்கள் "ராஜா போகும்போது

அரண்மனையை முறைத்துப் பார்த்துக் கொண்டு போனார்கள். அநேகமாக அரண்மனையைக் கைப்பற்ற வந்தவர்கள் போலத் தெரிகிறார்கள்.”



“ஐயோ இல்லை மகாராஜா... நாங்கள் தலையை நிமிர்த்திக் கூடப் பார்க்கவில்லை...”

பிரம்பு ராஜா “ஓ... அப்படியா அப்படியென்றால் நீங்கள் அரண்மனைக்கு மரியாதை செய்யாமல் போய்க் கொண்டிருந்தீர்கள்... அப்படித்தானே...” என்று கத்துவான்.

“அய்யய்யோ மகாராஜா நாங்கள் அரண்மனையைப் பார்த்து கும்பிடு போட்டுவிட்டுத் தான் போனோம்... மகாராஜா...”

“காவலர்கள் சொன்னது சரிதான்... நீங்கள் அரண்மனைக்குள் எப்படி நுழையலாம் என்று திட்டம் போட்டிருக்கிறீர்கள்...”

“இல்லை இல்லை மகாராஜா...”

“நான் நம்பமாட்டேன்... காவலர்களே இருவருக்கும் ஐம்பது பிரம்படி கொடுத்து அனுப்புங்கள்...”

உடனே காவலர்கள் அவர்கள் இருவருக்கும் பிரம்படி கொடுப்பார்கள். அவர்கள் வலியினால் துடித்து கத்துவதைப் பார்த்து ராஜா வயிறு குலுங்கச் சிரிப்பார்.

ராஜாவே இப்படி இருந்தார் என்றால் பின் மற்றவர்கள் எப்படி இருப்பார்கள்? மந்திரிகள், துணை மந்திரிகள், சேனாதிபதிகள், துணை

சேனாதிபதிகள், தளபதிகள், துணைத் தளபதிகள், அதிகாரிகள், அவர்களின் மனைவிமார்கள், காவலர்கள், அவர்களின் துணைவியார்கள் என்று எல்லோரும் மக்களை வாட்டி வதைத்தனர்.

பிரம்படி வாங்காமல் இருக்க லஞ்சமும் மக்கள் கொடுக்க வேண்டியிருந்தது. எனவே மக்கள் எப்போதும் பயந்து கொண்டேயிருந்தார்கள். அரசு அலுவலகங்களுக்கு போய் எந்த மனுவைக் கொடுத்தாலும் ஏதாவது ஒரு தப்பு கண்டுபிடித்தார்கள் அதிகாரிகள். அந்தத் தப்புக்காகப் பிரம்படி கொடுத்தார்கள். அல்லது லஞ்சம் கேட்டார்கள்.

பள்ளிக்கூடங்களிலும் அப்படித்தான் ஆசிரியர்கள் தினம் ரெண்டு பிரம்புகளை அடித்து ஒடித்தார்கள். குழந்தைகளின் முதுகும் கையும் காலும் வீங்கிப் போயிருந்தது.

ஏழைச் சிறுவன் சின்னமணியை இன்னிக்கு கணக்கு வாத்தியார் அடித்து விட்டார். அவனை அடித்ததில் அத்தத்தண்டி பிரம்பே ஒடிந்து விட்டது. அவன் அழுது கொண்டே பிரம்பூர் நாட்டுக்கு வெளியே உள்ள ஒரு பூந்தோட்டத்தில் வந்து விட்டான். அந்தத் தோட்டத்துப்பக்கம் யாரும் போகமாட்டார்கள். அங்கே பேய்கள் இருப்பதாகச் சொல்லுவார்கள். ஆனால் சின்னமணிக்கு அதெல்லாம் ஞாபகத்தில் இல்லை. அவன் அழுது கொண்டே அங்கேயிருந்த ஒரு ஆலமரத்தடியில் படுத்து உறங்கியும் விட்டான்.

சின்னமணி கண்முழிச்சிப் பார்க்கிறபோது ஒரே இருட்டாக இருந்தது. நட்டநடுநிசி. அவனுக்கு அருகில் கிசுகிசுவென்று பேச்சுச் சத்தம் கேட்டது. அவன் இருட்டில் உற்றுப்பார்த்தான். அவனைச் சுற்றி வண்ண

வண்ண உடைகள் உடுத்திய மூன்று தேவதைகள் தங்கள் வானவில் வர்ண சிறகுகளை அடித்துக் கொண்டே பறந்து கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்த உடனே சின்னமணிக்கு அழுகை வந்து விட்டது.



"ஏன் அழுகிறாய் தம்பி...?" என்று கேட்டார்கள்.

சின்னமணியும் அழுது கொண்டே அவனுடைய பிரம்பூர் நாட்டைப்பற்றியும் அங்கே மக்கள் படுகிற துன்பங்களையும் பற்றிச் சொன்னான். அந்தத் தேவதைகளுக்கு குழந்தைகள் அழுதால் பிடிக்காது. அதுவும் பிரம்பூர் நாட்டைப் பற்றிக் கேள்விப்பட்டதும் அவர்களுக்குக் கோபம் வந்து விட்டது.

"சரி தம்பி அழாதே... நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்..." என்று அவனுக்கு ஆறுதல் சொன்னார்கள். சின்னமணியின் அழுகை அடங்கியது. அதன் பின்னர், நீலநிறத்தேவதை அவனைத் தன் தங்க நிறக்கரங்களால் தொட்டாள். என்ன ஆச்சரியம்! உடனே சின்னமணியின் உடம்பில் இருந்த வீக்கமெல்லாம் மறைந்து விட்டது. பச்சை நிறத்தேவதை அவனுடைய உடைகளைத் தொட்டாள். கிழிந்திருந்த அவனுடைய உடைகள் புத்தம் புதிதாக மாறி விட்டன. சிவப்பு நிறத்தேவதை அவனுக்கு விதவிதமான பண்டங்களும் பலகாரங்களும் கொண்டுவந்து கொடுத்தாள். அவன் வயிறு முட்டச் சாப்பிட்டான். சாப்பிட்டதும் அவனை அறியாமல் உறக்கம் வந்து

விட்டது. அப்படியே உறங்கி விட்டான். காலையில் முழித்துப் பார்த்த போது எல்லாம் கனவு போல இருந்தது.

அவன் வீட்டிற்குப் போனான். இரவு முழுவதும் அவனைத் தேடிக்கொண்டிருந்த அம்மாவிடம் நடந்ததைச் சொன்னான். அம்மா அவனைக் கடிந்து கொண்டாள். நேரமாகிவிட்டது என்று பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிவிட்டாள்.

அன்று கரடிவாத்தியார் வகுப்பு. அவருக்கு வகுப்பிலுள்ள இருபது பையன்களையும் பிரம்பினால் அடித்தாலும் திருப்தி வராது. அன்றைக்கும் அப்படித்தான் அவர் வகுப்பினுள் வந்ததும் சின்னமணியைத்தான் கூப்பிட்டார்.

“ஏம்லே நேத்திக்கி கட்டுரை எழுதல...”

“ஐயா அதுக்கு நேத்திக்கே பிரம்படி வாங்கிட்டேன்..”

“அது நேத்திக்கி... இது இன்னக்கி...”

என்று சொல்லிக் கொண்டே பிரம்பை ஓங்கி அவனுடைய முழங்காலுக்குக் கீழே அடித்தார்.

என்ன ஆச்சரியம்! சின்னமணி சிரித்தான். அவனுக்கு வாத்தியார் அடித்தது மயிலிறகால் வருடியது போல இருந்தது. ஆனால் கரடிவாத்தியார் ஆ வென்று துள்ளிக்குதித்தார்.



அவருடைய முழங்காலுக்குக் கீழே அடி விழுந்தது. “ஏல எவம்ல என்பின்னாடி இருந்து அடிக்கிறது?” என்று காலைத்தடவிக் கொண்டே கத்தினார்.

பின்னால் யாரும் இல்லை. மறுபடியும் ஓங்கி சின்னமணியின் முதுகில் அடித்தார். சின்னமணி சிரித்தான். கரடிவாத்தியார் கத்தித் துள்ளிக் குதித்தார். கரடி வாத்தியாரின் முதுகும் காலும் வீங்கி விட்டது. அதுக்கப்புறம் அவர் சின்னமணியை அடிப்பாரா? உடனே பிரம்பை ஒடித்துத் தூரவீசினார்.

அன்று பிரம்பூர் நாடு முழுவதும் இப்படித்தான் நடந்தது. மந்திரிகள், துணை மந்திரிகள், சேனாதிபதிகள், துணை சேனாதிபதிகள், தளபதிகள், துணைத் தளபதிகள், அதிகாரிகள், அவர்களின் மனைவிமார்கள், காவலர்கள், அவர்களின் துணைவியார்கள் என்று எல்லோருடைய உடம்பும் வீங்கி விட்டது. இதில் பெரிய வேடிக்கை பிரம்பு ராஜாவின் உடம்பும் வீக்கத்தினால் அடையாளம் தெரியாத அளவுக்கு பெரியதாகி விட்டது. பிறகு என்ன சும்மாவா! அவர் அன்று முழுவதும் ஐநூறு பிரம்படிகளைக் கொடுக்கச் சொல்லியிருந்தார் அல்லவா?

அன்றுடன் பிரம்பூர் நாட்டில் எல்லோரும் பிரம்புகளை ஒடித்துத் தூர வீசிவிட்டார்கள். பிரம்புக்காட்டை மக்கள் எல்லோரும் சேர்ந்து அழித்து விட்டனர். பிரம்பூர் என்ற பெயரையும் அன்பூர் ஆக மாற்றி விட்டார்கள்.

# 5. ஜங்க் ஃபுட் தேசம்

மண்டியா தேசத்து மண்டு ராஜா வியாபாரத்துக்காக தன்னுடைய நாட்டின் எல்லைகளைத் திறந்து வைத்து விட்டார். உலகத்திலுள்ள நாடுகளிலிருந்து யார் வேண்டுமானாலும் வந்து மண்டியாவில் வியாபாரம் செய்து கொள்ளலாம். கிடைக்கும் லாபத்தை அவர்களுடைய நாட்டிற்குக் கொண்டு செல்லலாம் என்று சட்டம் கொண்டு வந்தார். அவ்வளவு தான். உலகம் பூராவிலிருந்து நிறைய முதலாளிகள் மண்டியா தேசத்துக்கு வியாபாரம் செய்ய படையெடுத்து வந்தார்கள்.

மண்டு ராஜா அரசவையில் உள்நாட்டு முதலாளிகளிடமும், வெளிநாட்டு முதலாளிகளிடமும் கலந்து ஆலோசித்துக் கொண்டிருந்தார். எல்லா முதலாளிகளும் தங்களுக்குக் கிடைக்கும் லாபம் போதவில்லை. இன்னும் அதிகமான லாபம் கிடைக்க மண்டியாவில் சில சட்டங்களைத் திருத்த வேண்டும் என்ற கோரிக்கையுடன் ராஜாவைச் சந்திக்க வந்திருந்தார்கள்.

இதெல்லாம் மந்திரிகளின் ஏற்பாடுதான். ஏனெனில் மந்திரிகளே வேறு ஆட்களின் பெயர்களில் நிறைய தொழிற்சாலைகளையும், கம்பெனிகளையும் நடத்தி வந்தார்கள். ராஜாவுக்கு எதைப்பற்றியும் கவலையில்லை.

முதலாளிகளின் வேண்டுகோளை ஏற்று பொருட்களின் விலையை ஏற்றுவதற்கு சம்மதித்தார். அதற்கான சட்டங்களில் கையெழுத்து போடப் போகும்போது அரண்மனைக்கு வெளியே கூச்சல், குழப்பம் கேட்டது.

ராஜா எழுந்து அரண்மனை உப்பரிகைக்குச் சென்று பார்த்தார். கூட்டம் கூட்டமாக விவசாயிகள் அரண்மனையின் வாசலை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். உடனே மந்திரியிடம் அவர்களை உள்ளே அனுப்பும்படி ஆணையிட்டார்.



அவ்வளவு பேரையும் உள்ளே அனுப்பினால் தாங்காது என்று நினைத்த மந்திரி ஒரு இருபது பேரை மட்டும் உள்ளே அழைத்து வர சேவகர்களுக்கு ஆணையிட்டார் மந்திரி. இருபது விவசாயிகள் ராஜாவைப் பார்க்க உள்ளே அனுமதிக்கப்பட்டனர்.

ராஜா அவர்களிடம் "உங்களுக்கு என்ன பிரச்னை? ஏன் எல்லோரும் சேர்ந்து வந்திருக்கிறீர்கள்.. மாதம் மும்மாரி பெய்கிறதல்லவா... மூன்று வேளையும் அறுசுவை உணவு கிடைக்கிறதல்லவா?" என்று அப்பாவியாய் கேட்டார்.

அதற்கு அந்த விவசாயிகள் "ராஜாதி ராஜாவே... மழை பெய்து இரண்டு வருடங்களாகி விட்டது... விவசாயம் பொய்த்து விட்டது... விவசாய நிலங்கள் அழிந்துவிட்டன. எங்கும் கட்டிடங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. ஏதோ கொஞ்ச நஞ்சம் விவசாயம் நடந்து கொண்டிருக்கிறது. அதுவும் அழிந்து விடும் போல இருக்கிறது. நாங்கள் வாழ வழியின்றி தவிக்கிறோம்" என்று கண்ணீர் விட்டனர்.

அதைக் கேட்ட ராஜா மந்திரியைப் பார்த்தார். மந்திரி தலையைக் குனிந்து கொண்டார்.

ஏனென்றால் ஒவ்வொரு மாதமும் ராஜா மந்திரியிடம் மாதம் மும்மாரி பெய்கிறதா என்று கேட்கும்போது அவர் ஆமாம் ராஜாவே என்று பதில் சொல்லுவார். ராஜா விவசாயிகளை வெளியில் காத்திருக்கச் சொல்லிவிட்டு உள்ளே வந்தார்.

வெளிநாட்டு முதலாளிகளிடம் "உங்கள் லாபம் அதிகரிக்க இன்னொரு புது வழி இருக்கிறது. கொஞ்ச நஞ்சம் நடந்து கொண்டிருக்கிற விவசாயத்தையும் நிறுத்திவிடச் சொல்கிறேன். ஆனால் உங்கள் கம்பெனியிலிருந்து விலை மலிவாக என் நாட்டு மக்களுக்கு உணவுப் பொருட்களைக் கொடுக்க முடியுமா?" என்று கேட்டார்.

உடனே அந்த முதலாளிகள் ஈயென்று பல்லைக் காட்டியபடியே, "அப்படியே ராஜா... உங்களுக்கு இலவசமாக ஆண்டு முழுவதும் உணவு கொடுத்து விடுகிறோம். ஏதோ ஏழை நாடுகளுக்கு எங்களால் இயன்ற சேவை..." என்று சொன்னார்கள். ராஜாவுக்கும் மகிழ்ச்சி. உடனே நாடெங்கும் முரசறையச் சொன்னார்.

மறுநாளிலிருந்து அந்த நாட்டின் பாரம்பரிய உணவுகளான இட்லி, தோசை, கொழுக்கட்டை, இடியாப்பம், கூழ், பொரிவிளங்காய், மாவிளங்காய், பயறு வகைகளான பாசிப்பயறு, தட்டாம்பயறு, கொண்டைக்கடலை, பருப்பு வகைகளான துவரம்பருப்பு, கடலைப்பருப்பு, உளுந்தம்பருப்பு, பாசிப்பருப்பு, கிழங்கு வகைகளான கருணைக்கிழங்கு, சேனைக்கிழங்கு, சேப்பங்கிழங்கு, சீனிக்கிழங்கு, ஏழிலைக்கிழங்கு, உருளைக்கிழங்கு, கம்பு, கேழ்வரகு, குதிரைவாலி, தினை, வரகு, சம்பா அரிசிவகைகள் எல்லாம் மறைந்து போயின.

ஐந்து பைசாவுக்கு டர்கரும், பத்து பைசாவுக்கு கூட்சாவும், ஏழு பைசாவுக்கு பாண்ட்விச்சும் மூன்று பைசாவுக்கு காக்கா, டுபீசி குளிர்பானங்களும் இருபத்திநாலு மணி நேரமும் வீட்டுக்கு வீடு கொண்டு வந்து கொடுக்கப்படும்.



வீட்டிலிருந்தபடியே கூப்பிடுவதற்கு அல்லைபேசி இலவசமாகத் தரப்படும். ஆனால் அதிலிருந்து அழைக்கப்படும் ஒவ்வொரு அழைப்புக்கும் ஒரு ரூபாய் கட்டணம் வசூலிக்கப்படும். உணவுப்பொருட்கள் பற்றிய விளம்பரங்களைப் பார்ப்பதற்கு வீட்டுக்கு வீடு விலையில்லா தொலைக்காட்சிப் பெட்டியொன்று வழங்கப்படும். ஆனால் அதில் விளம்பரங்களைத் தவிர வேறு எதுவும் ஒளிபரப்பாகாது. அப்படி நிகழ்ச்சிகள் இல்லாத சமயத்தில் தொலைக்காட்சிப் பெட்டியின் திரையில் கூட்சா தின்ற படி இருக்கும் ராஜாவின் அகன்ற முகம் மட்டுமே தெரியும். அதைப்பார்த்து யாரும் பயப்பட வேண்டியதில்லை.



இப்படியான அறிவிப்புகளை வெளிநாட்டு கம்பெனிகள் செய்ததைப்பார்த்து ராஜாவே மகிழ்ந்து போனார். இப்போது மக்கள் மூன்று வேளையும் கூட்சா, டர்கர், பாண்ட்விச், காக்கா, டுபீசி, குருளைக்கிழங்கு சிப்ஸ், டப்பைக்கிழங்கு ஃபிங்கர்சிப்ஸ் என்று விதவிதமாகச் சாப்பிட்டுக் கொண்டு வீட்டிலேயே கிடந்தனர்.

விளம்பரங்கள் புதிது புதிதாக வந்தன. விளம்பரங்களில் மண்டியா தேசத்து மக்களின் மனங்கவர்ந்த சினிமா நட்சத்திரங்களும், விளையாட்டு வீரர்களும் நடித்தனர். அவர்கள் சாப்பிடுவதனாலேயே மக்களும் அதைச் சாப்பிட்டனர். வியாபாரம் பெருகியது.

ஆனால் விவசாயிகள் போராட்டம் நடத்தினர். நம்முடைய பாரம்பரிய உணவுமுறைகளை மாற்றக்கூடாது. வெளிநாட்டு உணவுப்பொருட்களால் புதிய நோய்கள் உருவாகும் என்று மன்றாடினர். ஆனால் ராஜா கேட்கவில்லை. மந்திரியும் கேட்கவில்லை.

மண்டியா தேசத்தில் ஜங்க்ஃபுட் வியாபாரம் கொழித்து நடப்பதைக் கண்ட மற்ற வெளிநாட்டு முதலாளிகளும் இங்கே கடை விரித்தனர். ஒருத்தருக்கொருத்தர் போட்டி போட்டுக் கொண்டு விலையைக் குறைத்தனர்.

ராஜாவுக்கும் மக்களுக்கும் கொண்டாட்டம். ஆனால் நாட்டில் விவசாயம் இல்லை. ஒரு உணவுப்பொருள் கூட உற்பத்தி ஆகவில்லை. நாளாக நாளாக அரசாங்கத்தின் கஜானாவும், மக்களின் கைப்பணமும் கரைந்தது. சரியாக அந்த நேரத்தில் எல்லாவெளிநாட்டுக் கம்பெனிகளும் தங்களுடைய உணவுப்பொருட்களுக்கு விலையை ஏற்றி விட்டனர்.

மக்களால் வாங்க முடியவில்லை. மண்டியா நாட்டுக்குச் சொந்தமான, பாரம்பரிய உணவுப்பொருட்கள் என்னவென்றே எல்லோருக்கும் மறந்து போனது. அந்த கூட்சா, டர்கர், பாண்ட்விச், காக்கா, டூப்சி, போன்ற உணவுப்பொருட்களுக்கு மக்கள் அடிமையாகி விட்டார்கள்.

அதைச்சாப்பிடாமல் இருக்கமுடியாது என்ற நிலைமைக்கு வந்து விட்டார்கள்.

இப்போது அந்த நாட்டில் புதிய புதிய நோய்கள் உருவாகி மக்களைப் பாடாய்ப் படுத்தின. அந்த நோய்கள் வராமலிருக்க தடுப்பூசிகளும், வந்தால் குணப்படுத்த மருந்துகளும் வெளிநாட்டிலிருந்தே வந்தன.

வெளிநாட்டு மருந்துக்கம்பெனிகள் தங்களுடைய கிளைகளை மண்டியா நாட்டில் துவங்கின. மண்டியா நாட்டுச் செல்வங்களையெல்லாம் வெளிநாடுகள் கொள்ளையடித்துச் சென்றன. மக்கள் பசியாலும் பட்டினியாலும் வாடினர்.

அதற்கப்புறம் அந்த மண்டியா நாட்டில் என்ன நடந்தது என்று தெரிந்து கொள்ள ஆவலாக இருக்கிறீர்களா.. முடிந்தவரை கொள்ளையடித்த பின்னால் வெளிநாடுகள் தங்களுடைய எல்லாக் கம்பெனிகளையும் மூடி விட்டனர்.

இப்போது மண்டியா நாட்டில் தங்களுடைய சொந்த உணவுகளை மறந்து விட்டனர். மக்கள் கூட்டமாக சென்று முறையிட்டனர். ராஜா தொல்லியல் அறிஞர்களிடம் மண்டியா நாட்டின் பாரம்பரியப் பயிர்களையும் உணவுப்பொருட்களையும் கண்டு பிடிக்கச் சொன்னார். அந்த நாட்டு தொல்பொருள் ஆய்வாளர்கள் மண்டியா நாட்டு பாரம்பரியமான உழவுத்தொழில் பற்றியும், உணவுப்பொருட்கள் பற்றியும் ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். உங்கள் நாட்டில் அப்படியெல்லாம் இல்லை அல்லவா?

# 6. மாயக்கண்ணாடி

எப்போதும் கிள்ளியூர் தேசத்து ராஜா கண்ணாடி பார்க்க மாட்டார். அவர் அழகு அவருக்குத் தெரியுமோ இல்லையோ மற்றவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதோடு கண்ணாடி பார்க்க அவருக்கு நேரமும் கிடையாது. சாப்பிடவும் தூங்கவுமே நேரம் சரியாக இருக்கும்போது கண்ணாடியை எங்கே பார்க்க முடியும்.

அவர் அரைத்தூக்கத்தில் இருக்கும்போது அந்தப்புர சேவகர்கள் அவரைக் குளிப்பாட்டி, பவுடர், வாசனைத் திரவியங்களைப் பூசி ஒப்பனை செய்து விடுவார்கள்.

ராஜா நன்றாக விழிக்கும்போது அவர் முன்னால் சாப்பாடு தான் இருக்க வேண்டும். அதனால் கிள்ளியூர் தேசத்து அரண்மனையில் எப்போதும் விருந்து நடந்து கொண்டேயிருக்கும். உலகத்தின் அத்தனை நாடுகளிலிருந்தும் சமையல்காரர்களை அழைத்து வந்து சமைக்கச் சொல்லி சாப்பிட்டுக் கொண்டேயிருப்பார் ராஜா. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நாட்டுச் சமையல்.

அவருக்கு வேறு எந்தச் சிந்தனையும் இல்லை. எப்போதும் சாப்பாட்டு அயிட்டங்களைப் பற்றியே யோசித்துக் கொண்டிருப்பார். சில சமயங்களில் யோசனை பலமாகி வாயிலிருந்து ஜொள்ளு வடிய ஆரம்பித்து விடும். அதைத் துடைத்து விடுவதற்கென்றே ஒரு சேவகரைப் போட்டிருந்தார்.

உலகமெங்கும் ஒற்றர்களை அனுப்பி எந்த எந்த நாட்டில் என்ன என்ன உணவுப்பொருட்கள் பிரபலம் என்று ஒற்று அறிந்து ஓலை அனுப்பச் சொல்லியிருந்தார். இப்படியே உலக அளவில் சாப்பாட்டுராமன் என்று பேர் வாங்கி விட்டார். அதற்காக அளிக்கப்பட்ட உலக சாதனை சான்றிதழையும் அரண்மனை வாசலில் கண்ணாடிச் சட்டமிட்டு தொங்க விட்டார்.

விதவிதமான சாப்பாடுகளைத் தின்று தின்று ராஜா ரெம்பக் குண்டாகிப் போனார். மலை அசைந்து வருவதைப் போல நகர்ந்து வந்தார். சில நாட்களில் சாப்பிட்டு முடித்து நடக்க முடியவில்லையென்றால் அவரை அந்தப்புரத்துக்கு தூக்கிக் கொண்டு செல்ல மட்டும் ஐம்பது வீரர்கள் இருந்தார்கள். அவர்கள் அனைவரும் சேர்ந்து தூக்கவே சிரமப்பட்டார்கள்.

அப்படி ஒரு நாள் மதிய நேர விருந்தாக இத்தாலி நாட்டு பாஸ்தா, அமெரிக்காவின் பீட்சா, ஸ்விட்சர்லாந்து நாட்டு இளங்கன்று கறி, அமேசான் காடுகளில் மட்டுமே வாழும் முதலைக் கறி, திருச்சியின் அக்கார அடிசில், ஹைதராபாத்தின் மொகல் பிரியாணி, திருநெல்வேலி அல்வா, சீனாவிலிருந்து புகையிடப்பட்ட பன்றிக் கறி, பம்பாயின் ஜர்தா பீடா என்று எல்லாவற்றையும் சாப்பிட்டுமுடித்தார். பின்னர் தன்னுடைய மலை போன்ற உடம்பை அசைத்தபடி அந்தப்புரத்திற்குள் போய்க் கொண்டிருந்தார்.



அப்போது தான் அந்தப்புரச் சுவரில் பதித்திருக்கும் கண்ணாடியைப் பார்த்தார். கண்ணாடியில் ஒரு பெரும் ராட்சசன் அசைந்து

போவது தெரிந்தது. முதலில் அவனைப் பார்த்த அவர் பயந்து அலறி விட்டார். அவர் கீழே விழுந்து விடாமல் தாங்கிப் பிடிப்பதற்க்காக கூட வந்த வீரர்களும் அலறி விட்டார்கள். ராஜா என்ன செய்தாலும் அவர்களும் செய்ய வேண்டுமே.


அதன் பிறகு உற்றுக் கவனித்த ராஜா கண்ணாடியில் தெரிந்த பிம்பம் தான் தானென்று தெரிந்து கொண்டார். அவ்வளவு தான் அவருக்கு கோபம் வந்து விட்டது. உடனே அரண்மனையில் உள்ள அத்தனை கண்ணாடிகளையும் உடைத்து நொறுக்கச் சொன்னார். அவருடைய நாட்டில் கண்ணாடியே இருக்கக் கூடாது என்று சட்டம் போட்டார். ராஜாவின் வீரர்கள் நாட்டிலுள்ள குடிமக்கள் ஒவ்வொருத்தரின் வீட்டுக்கும் சென்று அங்கிருந்த கண்ணாடியை அடித்து நொறுக்கினார்கள். மக்களால் எதுவும் செய்ய முடியவில்லை.

யாரும் கண்ணாடி பார்க்க முடியவில்லை. முடி வெட்ட முடியவில்லை. ஆண்கள் முகம் சவரம் செய்ய முடியவில்லை. பெண்கள் ஒப்பனை செய்ய முடியவில்லை. எல்லோரும் கிட்டத்தட்ட காட்டுமிராண்டிகளைப் போல தலை முதல் கால் வரை முடி வளர்ந்து தொங்க அலைந்து திரிந்தனர்.

வெளியூரிலிருந்தோ வெளிநாட்டிலிருந்தோ யாரும் வருவதில்லை. இவர்களும் எங்கேயும் போவதில்லை. இவர்களைப் பார்த்து மற்றவர்கள் பயந்து ஓடினார்கள். ஏன் இவர்களே திடீர் திடீரென ஒருவரையொருவர் பார்த்து பயந்து அலறினர். குழந்தைகளுக்குத் தங்கள் அப்பா அம்மாவை அடையாளம் தெரியவில்லை. ஒவ்வொருவரையும் பார்த்துப் பார்த்து அழுதனர். நாடெங்கும் குழந்தைகளின் அழுகையொலி கேட்டுக் கொண்டேயிருந்தது.

ஒரு நாள் அந்த நாட்டின் மீது அழகின் தேவதையான வீனஸ் பறந்து போய்க் கொண்டிருந்தாள். குழந்தைகளின் அழுகையைக் கேட்டு ஒரு நிமிடம் மிதந்தபடியே அந்த மக்களைப் பார்த்தாள். தாடி, முடி, ஒப்பனையின்றி அவலட்சணமாக இருந்த அந்த மக்களைப் பார்த்து அருவெறுப்படைந்தாள் அழகின் தேவதை வீனஸ். அப்படியே அந்த நாட்டு அரண்மனைக்கு பறந்து சென்றாள். அரண்மனை வாசலில் இருந்த அறிவிப்பைப் படித்ததும்தான் அந்த நாட்டு மக்கள் ஏன் இப்படி ஆனார்கள் என்று தெரிந்தது.





உடனே வீனஸ் பெல்ஜியம் நாட்டு கண்ணாடி வியாபாரியாக உருமாறினாள். அரண்மனைக்குச் சென்று ராஜாவைப் பார்க்க வேண்டும் என்று மந்திரியிடம் சொன்னாள். அவர்களும் மன்னரிடம் அந்தக் கண்ணாடி வியாபாரியை அழைத்துச் சென்றனர்.

ஒரு பெரிய மலைக்காடு மாதிரி இருந்த ராஜா அசைந்து வந்தார். அவரிடம் கண்ணாடி வியாபாரி, “மன்னா உங்கள் நாட்டில் யாரும் கண்ணாடியைப் பார்ப்பதில்லை என்று கேள்விப்பட்டேன். எங்கள் நாட்டுக் கண்ணாடி அபூர்வமானது… இதை ஒரு முறை நீங்கள் பார்த்து விட்டால் அப்புறம் பார்த்துக் கொண்டேயிருப்பீர்கள்…” என்று சொல்ல ராஜாவின் அங்கமெல்லாம் கோபத்தால் துடித்தது.

அவர், “என்ன தைரியம்? யாரங்கே.. இவனைப் பிடித்துச் சிறையில் அடையுங்கள்…” என்று சொல்லிய வாயை மூடவில்லை.

அதற்குள் அவருக்கு முன்னாள் நீட்டிய கண்ணாடியில் அவருடைய உருவம் அழகாக இருந்தது. நல்ல உடற்கட்டுடன் ராஜா அதில் அழகு வழியத் தெரிந்தார். அவருக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. ஏனெனில் மாறுவேடத்தில் இருந்த வீனஸ் தேவதை ராஜாவின் முன்னால் காண்பித்த கண்ணாடி மாயக்கண்ணாடி. அதில் யார் பார்த்தாலும் அவர்கள் அழகாகத் தெரிவார்கள்.

ராஜா, "கண்ணாடி வியாபாரியே இவ்வளவு அழகான நான் இவ்வளவு நாளாகக் கண்ணாடி பார்க்காமல் இருந்து விட்டேனே..." என்று உச்சு கொட்டினார். கண்ணாடி வியாபாரியான வீனஸும், "ராஜாவே எனக்கு யாரும் அசிங்கமாக இருந்தால் பிடிக்காது... எல்லோரும் அழகு தான்... நீங்கள் தினமும் இந்தக் கண்ணாடியைப் பார்ப்பதற்கு முன்பு காலையும் மாலையும் இரண்டு மணி நேரம் உடற்பயிற்சி செய்ய வேண்டும் அப்படிச் செய்தால் தான் இந்தக் கண்ணாடி உங்கள் உருவத்தைக் காட்டும் இல்லையென்றால் உங்கள் உருவம் தெரியாது..." என்று சொன்னாள்.

ராஜாவும் சரியென்றார். உடனே வீனஸ் அந்த மாயக்கண்ணாடியை ராஜாவிடம் கொடுத்து விட்டுப் போனாள். ராஜா கண்ணாடி பார்க்கிறார் என்றதும் குடிமக்களும் கண்ணாடி வாங்கினார்கள். முடி திருத்தினார்கள். முகம் சவரம் செய்து செய்து கொண்டார்கள். ஒப்பனை செய்து தங்கள் உருவத்தை அழகுபடுத்திக் கொண்டனர்.

வீனஸ் சொன்ன மாதிரி ராஜா காலையும் மாலையும் உடற்பயிற்சி செய்து விட்டு வந்து கண்ணாடியைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஆறு மாத காலத்தில் அவர் கட்டுடல் கொண்டவராக அழகனாக மாறி விட்டார்.




இப்போது அவர் அந்த மாயக்கண்ணாடியைக் கொடுத்த கண்ணாடி வியாபாரியைத் தேடிக் கொண்டிருக்கிறார்.

எதற்கு தெரியுமா?

பரிசுகள் வழங்கி, நன்றி சொல்ல!

# 7. போக்குவரத்தில் குழப்பம்

ஒரு நாள் அறிவூர் தேசத்து ராஜாவும் மந்திரியும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆடி காரில் நகர்வலம் வந்து கொண்டிருந்தனர். கார் அலுங்காமல் குலுங்காமல் சொகுசாகப் போய்க் கொண்டிருந்தது.



உள்ளே உட்கார்ந்து சிக்கன் பீட்சாவை வாயில் வைத்து கடித்து இழுத்துக் கொண்டிருந்த ராஜாவின் ஆடி கார் திடீரென பிரேக் அடித்து நின்றது. வாய்க்குள் போக வேண்டிய பீட்சாவின் துண்டு மூக்குக்குள் போய் விட்டது. குகை போன்ற மூக்கை விரித்து அவர் போட்ட தும்மலில் கார் ஒரு இரண்டடி உயரம் மேலே தூக்கிப் போட்டது.

அவர் இருக்கையிலிருந்து சரிந்து காருக்குள்ளேயே கீழே விழுந்து விட்டார். அவருடைய பருத்த உடல் கார் இருக்கைகளின் நடுவே சிக்கிக் கொள்ள அவரால் எழுந்திரிக்க முடியவில்லை. மந்திரியாலும் அவரைத் தூக்கிவிட முடியவில்லை. கடைசியில் காரை அப்படியே ஓரங்கட்டி கார் கம்பெனியின் மெக்கானிக்குகளும், ஃபிட்டர்கள், வெல்டர்கள், என்று ஒரு பெரிய கூட்டமே வந்து காரை இரண்டாக வெட்டி ராஜாவை மீட்டார்கள்.

மறுநாள் ராஜாவின் கார் அப்படி பிரேக் போட்டு நின்றதுக்கான காரணத்தைக் கண்டுபிடிப்பதற்காக ஓய்வு பெற்ற பழைய ராஜகுரு தலைமையில் ஒரு விசாரணைக் கமிஷன் அமைத்தார்கள்.

அந்த ராஜகுரு காரை ஓட்டிய காரோட்டியை மட்டும் விட்டு விட்டு ஊரில் இருந்த அத்தனை பேரிடமும் மாதக்கணக்காக விசாரித்தார். ராஜாவைக் கொல்வதற்கான வெளிநாட்டு சதியாக இருக்கலாம் என்றும், தீவிரவாதிகளின் சதி என்றும் அந்த நாட்டில் வெளியான பத்திரிக்களும், தொலைக்காட்சி சேனல்களும் செய்தி வெளியிட்டன. ராஜகுரு ஆயிரம் பக்கத்தில் ஒரு இடைக்கால அறிக்கையும் சமர்ப்பித்தார்.

அதில் அவர் ஆயிரம் காரணங்களைக் குறிப்பிட்டிருந்தார். இன்னும் பத்தாயிரம் காரணங்களை அவருடைய முழுமையான அறிக்கையில் பார்க்கலாம் என்று வேறு எச்சரித்திருந்தார். ராஜாவும் மந்திரியும் பயந்து போனார்கள்.



அப்போது காரோட்டி தான் பிரேக் போட்டுக் காரை நிறுத்தியதற்கான காரணத்தைச் சொன்னான். சாலையிலுள்ள சிக்னலில் திடீரென சிவப்பு விளக்கு எரிந்ததால் பிரேக் போடும்படியாகிவிட்டது என்று சொன்னான்.

ராஜாவுக்கு கோபம் கொழுந்து விட்டு எரிந்தது. உடனே என்ன செய்தார் தெரியுமா? சாலை சிக்னல்களில் பச்சை விளக்கைத் தவிர வேறு விளக்குகள் எரியக் கூடாது என்று சட்டம் போட்டார். ராஜா போட்ட சட்டத்தை மீற முடியுமா?

உடனே நாடெங்கும் சாலைகளில் சிவப்பு விளக்கும் மஞ்சள் விளக்கும் அகற்றப்பட்டன.

மக்களுக்கு ஆச்சரியம்! எல்லாக் கம்பங்களிலும் பச்சை விளக்கு மட்டும் எரிவதைப் பார்த்ததும் தங்களுடைய கார், பைக், மொபெட், சைக்கிள், என்று எல்லா வாகனங்களிலும் பிரேக்கையே எடுத்து விட்டார்கள்.

வேகம்... வேகம்... எல்லோரும் பறக்க ஆரம் பித்தார்கள். என்ன ஆகும்? ஏகப்பட்ட இடங்களில் விபத்து. சாலை விபத்துகளில் மரணம், படுகாயம், என்று அன்றாடம் செய்திகள் நூற்றுக் கணக்கில் குவியத் தொடங்கியது. அவ்வளவு பேருக்கும் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமானால் கஜானா திவாலாகி விடும் என்று மந்திரி ராஜாவை எச்சரித்து விட்டார்.

கஜானா காலியாகிவிடும் என்று கேட்ட உடனேயே சட்டத்தை மாற்றி விட்டார். எப்படி தெரியுமா?

எச்சரிக்கை விளக்கான மஞ்சள் மட்டும் எரியலாம். பச்சையும் வேண்டாம். சிவப்பும் வேண்டாம். என்று ஆணையிட்டார். நாடெங்கும் மஞ்சள் மட்டும் எரிந்தது.

எல்லோரும் எச்சரிக்கையாக, மிக மிக மெதுவாக அசைந்து கொண்டிருந்தனர். ஒவ்வொரு வண்டியும் ஒரு தெருவைக் கடக்க ஒரு மணிநேரம் ஆனது. காலையில் வீட்டிலிருந்து அலுவலகம் கிளம்பியவர்கள் சாயந்திரம் தான் அலுவலகம் போய்ச் சேர்ந்தார்கள். அலுவலகம் மூடுகிற

நேரம் ஆகிவிட்டதால் அப்படியே பொடிநடையாய் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

இப்படியே நாட்டில் எல்லா வேலைகளும் மிக மிக மெதுவாக நடந்தன. ராஜாவின் தலைமைச் சமையல்காரர் அரண்மனையின் அடுத்த தெருவில் குடியிருந்தாலும் காலையில் கிளம்பி மதியம் தான் வந்து சேர முடிந்தது. ராஜாவுக்கு பசி தாங்க முடியவில்லை. மறுபடியும் சட்டத்தை மாற்றினார்.

எல்லா விளக்குகளையும் ஒன்று போல எரிய விட வேண்டும். யாருக்கு எது தேவையோ அதை அவர்கள் பின்பற்றி சாலையில் போக வேண்டும் என்று ஆணையிட்டார். மறுநாள் எல்லா விளக்குகளும் ஒன்று போல எரிந்தன. நாடெங்கும் பெருங்குழப்பம். யாருக்கு எதை பின்பற்ற வேண்டும் என்று புரியவில்லை.



பச்சையைப் பார்த்து ஓட்டியவர் சிவப்பைப் பார்த்து நின்றவரின் பின்னால் போய் முட்டி நின்றார். மஞ்சளைப் பார்த்து எச்சரிக்கையாக ஓட்டிக் கொண்டிருந்தவர் பச்சைக்கு வழி விடவில்லை. ஆனால் அவருக்கு சிவப்பு வழி விடவில்லை. இப்படி வீட்டை விட்டு வெளியே வந்தவர்கள் எல்லோரும் சாலையிலேயே இரவும் பகலுமாக எங்கும் போக முடியாமல் கிடந்தார்கள்.

அன்று வெள்ளிக்கிழமை. கோவிலுக்குப் போவதற்காக அரண்மனையை விட்டு வெளியே வந்த ராஜாவினால் எங்கும் ஒரு அடி கூட நகரமுடியவில்லை.

எல்லோரும் சாலையோரத்திலேயே சமைத்து சாப்பிட்டு, படுத்து உறங்கிக் கிடப்பதைப் பார்த்தார். ரெம்ப அப்பாவியாய், என்ன ஆச்சு ஏன் எல்லோரும் அவரவர் வீட்டுக்குப் போகாமல் இங்கே கிடக்கிறார்கள்? என்று கேட்டார். அதற்கு மந்திரியும் அவருடைய சட்டத்தைப் பற்றிச் சொல்ல ராஜாவுக்கு அப்போது தான் ஞானோதயம் வந்தது.

சரி... சரி... பழைய மாதிரியே இருந்து விட்டு போகட்டும் என்று சொல்ல முதலில் இருந்த மாதிரியே சிக்னல்கள் தேவைக்கு ஏற்ப மாறி மாறி எரிய ஆரம்பித்தன. போக்குவரத்தில் இருந்த குழப்பம் நீங்கியது. அறிவூர் தேசத்து மக்களும் மகிழ்ந்தனர்.

# 8. காற்று பிரியாத கதை

சாப்டூர் தேசத்து ராஜா விதவிதமாய் சாப்பிடுவதில் விருப்பமுடையவர் என்பது உலகத்துக்கே தெரியும். அப்படிக் கண்டதையும் சாப்பிட்டு விட்டு



அவர் விடும் கீழ்க்காற்று அதாங்க குசு ஊரையே நாறடித்து விடும்.

எல்லோரும் மயக்கமாகும் அளவுக்கு அந்த நாத்தம் இருக்கும். ஆனால் ராஜா சொல்வார். ஆகா என்ன ஒரு சுகந்த மணம் வீசுது... மந்திரி என்பார். மந்திரி மூச்சை இழுத்து நிறுத்தியபடியே ஆமாம் ஆமாம் என்று தலையாட்டுவார். ஒரு நாள் விபரீதமாய் ராஜா குசுப் போடும் முன்னால் மந்திரி டியூவ் என்று சின்னதாய் ஒரு குசு போட்டு விட்டார். உடனே ராஜா என்ன கேவலமான நாத்தம்... இப்படித்தான் என் நாட்டு மக்கள் தின்று விட்டு குசுப்போட்டுக் கொண்டு திரிகிறார்களா என்று மந்திரியிடம் கேட்க மந்திரியும் பயந்து கொண்டே ஆமாம் ராஜா ஆமாம் என்று தலையாட்டினார்.

அவ்வளவு தான். ராஜா உடனே அவசர சட்டம் போட்டார். இனி நாட்டில் யாரும் குசு போடக்கூடாது. உடனடியாக அரண்மனை மருத்துவர்களிடம் சொல்லி நாட்டு மக்கள் எல்லோருக்கும் ஆசனவாயில் பிளாஸ்திரி போட்டு ஒட்டி விடச் சொல்லி ஆணையிட்டார். மந்திரியும்

இந்த ஆணைக்குத் தப்பவில்லை. காலையில் ஒரு மணி நேரம் மட்டும் பிளாஸ்திரியை எடுத்து மலஜலம் கழிக்கலாம். மற்ற நேரங்களில் யாரும் பிளாஸ்திரியை எடுக்கக் கூடாது. என்ன ஆகும்?

காலையில் அந்த ஒரு மணிநேரம் நாடே ஆய் இருந்தால் என்ன ஆகும்? நாத்தம் அண்டை நாடுகளுக்குப் பரவியது. அவர்கள் சாப்டூர் நாட்டில் ஏதோ ரசாயன ஆயுதம் தயாரிக்கிறார்கள். அதை அண்டை நாடுகளின் மீது போட்டு பரிசோதனை செய்கிறார்கள் என்று நினைத்தார்கள். எல்லோரும் சேர்ந்து சர்வநாட்டு சபையிடம் புகார் அளித்தார்கள்.





உடனே உலகை ஆளும் பேராசை கொண்ட பேரிக்கா நாடு தன்னுடைய ஒற்றர்படையை சாப்டூர் நாட்டுக்கு அனுப்பியது. அந்த ரசாயன ஆயுதத்தின் ரகசிய ஃபார்முலாவைத் திருடிக் கொண்டுவர உத்தரவிட்டது.

சாப்டூர் நாட்டில் மக்களுக்கு காற்று சரியாகப் பிரியாததினால் வயிற்றுக்கோளாறுகள் ஏற்பட்டன. வாய்வுத் தொந்திரவினால் எல்லோரும் அவதிப்பட்டனர். கீழே போக முடியாத காற்று மேல் நோக்கி எழும்பி வாய் வழியே ஏப்பம் ஏப்பமாக வந்தது. வயிற்றுவலியினால் மருத்துவமனைகள் எங்கும் மக்கள் வரிசையில் காத்திருந்தனர். அது மட்டுமல்லாமல் மலச்சிக்கல் வேறு.

எல்லோரும் முக்கி முக்கி மலம் கழித்தும் திருப்தியில்லாமல் எப்போதும் முக்கிக் கொண்டே திரிந்தனர். காற்று, மலம், நீர், பிரியாததினால் நாட்டு மக்கள் எல்லோரும் நோய்வாய்ப்பட்டனர். எல்லோரும் எப்போதும் மருத்துவமனையே கதி என்று கிடந்தனர். அதனால் நாட்டில் ஒரு வேலை நடக்கவில்லை. ராஜாவின் போர்ப்படையும் மருத்துவமனையில் இருந்தது.

இது தான் சாக்கு என்று பேரிக்கா நாடு படையெடுத்து வந்து சாப்டூரை முற்றுகையிட்டது. சாப்டூரில் போர் முரசு ஞீம் ஞீம் என்று முக்கி முக்கி முழங்கியது. யாரும் யுத்தத்துக்குத் தயாராக இல்லை.

இப்போது தான் உறங்கி எழுந்ததைப் போல ராஜா என்ன விஷயம் ஏன் எல்லோரும் மருத்துவமனையில் கிடக்கிறார்கள்? என்று கேட்டார். உடனே மந்திரியும் எல்லாம் அந்த பிளாஸ்திரி விஷயம் தான் ராஜா என்று சொல்லிவிட்டார்.

ராஜாவுக்கு அப்போது தான் தான் செய்த தவறு புரிந்தது. உடனே பிளாஸ்திரி சட்டத்தை ரத்து செய்தார். **இயற்கைக்கு மாறாக எதுவும் செய்யக்கூடாது** என்று சர்வநாட்டுசபையும் எச்சரித்தது. மக்கள் விரைவில் நலமடைந்தனர். சாப்டூரை முற்றுகையிட்ட பேரிக்கா நாடும் பின்வாங்கியது.

# ௯. காணாமல் போன சொற்கள்

கோட்டையூர் நாட்டு மந்திரிசபையில் பேச்சாளர்கள் அதிகமாகி விட்டனர். எப்போது பார்த்தாலும் பேச்சுத் தான். இருபத்திநாலுமணி நேரமும் பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கேட்டு மக்களும் ஒரு வேலையும் செய்யாமல் தெருக்களில் பேசிக் கொண்டிருந்தார்கள்.



நாடே பேசிக் கொண்டிருந்ததால் ஒலி மாசு ஏற்பட்டு பக்கத்திலுள்ள நாடுகள் எல்லாம் கோட்டையூரைப் பற்றி சர்வநாட்டு சபையில் புகார் அளித்தன.

அது மட்டுமில்லாமல் எல்லோரும் ஒரே நேரத்தில் பேசிக் கொண்டிருந்ததால் யார் என்ன பேசுகிறார்கள் என்று யாருக்கும் புரியவில்லை. யாரும் யார் பேசுவதையும் கேட்கவில்லை. ஒலிகள் செவிப்பறையைக் கிழித்து காதுகளைச் செவிடாக்கி விட்டன. காது செவிடானது கூட தெரியாமல் எல்லோரும் பேசிக்கொண்டிருந்தனர். பேசிப் பேசி தொண்டைத்தண்ணீர் வற்றினாலும் விடவில்லை. ஒரே சத்தக்காடாக இருந்தது நாடு.

இந்த சத்தத்தில் குழம்பிப் போன சொற்கள் திக்கு திசை தெரியாமல் ஓடி விட்டன. கோட்டையூரில் இப்போது சொற்களே இல்லை.

அதற்குப் பின்பு யாராலும் பேசவே முடியவில்லை. எவ்வளவு முயற்சி செய்தாலும் அர்த்தமில்லாத ஒலிகள் தான் வெளியே வந்தன. சொற்கள் தான் ஓடியே போய் விட்டதே. எல்லோரும் கைகளையும் கால்களையும் ஆட்டினர். முகத்தை கோணிக் கோணி சைகையில் பேசினர்.

சொற்கள் இருந்த போது யாரும் சைகையில் பேசியது கிடையாது அல்லவா. அதனால் எல்லோருக்கும் சைகைகளும் மறந்து போய் விட்டன. எல்லாம் குண்டக்க மண்டக்க நடந்தன.

கோட்டையூர் நாட்டு ராஜாவுக்கு எதிரி நாட்டு மன்னன் ஓலை அனுப்பியிருந்தான். அதில் அடுத்த பௌர்ணமியன்று கோட்டையூர் நாட்டின் மீது படையெடுத்து வருவதாக எழுதப் பட்டிருந்தது. ஆனால் கோட்டையூர் நாட்டில் யாருக்கும் அதைப் படிக்கத் தெரியவில்லை. ஓலையை எப்படிப் பார்த்தாலும் வெறும் கோடுகளாய் தெரிந்ததே தவிர வேறு ஒன்றும் புரியவில்லை.



ராஜா பயந்து போனார். உடனே நாடெங்கும் முரசறைந்து சொற்களைக் கண்டு பிடித்துக் கொண்டுவரும்படி நாட்டு மக்களுக்கு ஆணையிட்டார். எல்லோரும் சொற்களைத் தேடி அலைந்தனர். காடு, மலை, குளம், குட்டை, ஏரி, நகரம், கிராமம், தெருக்கள், சாலைகள், என்று எல்லா

இடங்களிலும் தேடினர். கோட்டையூர் நாட்டு எல்லையில் ஒரு ஓலைக்குடிசை இருந்தது. அந்தக் குடிசையில் ஒரு வயதான கிழவியும், அவளுடைய பேரனும் வசித்து வந்தனர். சொற்களைத் தேடி வந்த அரண்மனை சேவகர்கள் அந்தக் குடிசையைத் தாண்டிப் போகும்போது அவர்களில் ஒருவன், "டேய் இந்தக் குடிசையைப் பாக்க வேண்டாமா...?" என்று சைகையிலேயே கேட்டான். அதற்கு மற்றவன், "இம்மாம் பெரிய நாட்டில் இல்லாதது இந்த ஓலைக்குடிசையில இருக்கப் போகுதாக்கும்." என்று சைகையிலேயே வக்கணை வழித்தான். அவர்கள் அப்படிப் போகும்போது காற்று வீசியது. காற்றில் குடிசையில் உள்ள ஓலைகள் ஆடின. அப்போது, "நல்ல வேளை பாக்கல..." என்ற சொற்கள் அவர்களுக்குக் கேட்டன. ஆகா.. என்ன ஆனந்தம். அவர்களுக்கு சொற்களைக் கேட்டதும் மகிழ்ச்சி பொங்கியது. உடனே அந்தக் கிழவியையும் அவளுடைய பேரனையும் கூட்டிக் கொண்டு அரண்மனைக்குப் போனார்கள்.

கிழவியும் பேரனும் பேசியதைக் கேட்ட ராஜாவுக்கு ஆனந்தம் பொங்கியது.

அப்படியே அவர்களை அணைத்துக் கொண்டார். மறுபடியும் நாட்டில் சொற்களைக் கொண்டு வரும்படி அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

கிழவி தன் நரைத்த தலைமுடியை அவிழ்த்து உதறினாள். அதோடு தன் மடியில் உருகாஞ்சுருக்கு போட்டு வைத்திருந்த பையை எடுத்து உதறினாள். கூட்டம் கூட்டமாய் சொற்கள் கீழே விழுந்தன. பேரனும் தன் டவுசர் பையில் சேர்த்து கொஞ்சம் கொஞ்சமாய் வைத்திருந்த சொற்களை

எடுத்து வெளியில் விட்டான். கிழவி, "இன்னும் என்னோட குடிசை ஓலையில நிறைய சேர்த்து வச்சிருக்கேன்... எல்லா சொற்களும் நாட்டை விட்டு வெளியேறும்போது நாந்தான் தடுத்து என்னோட குடிசையில வச்சி காப்பாத்திகிட்டு வாரேன்..." என்று சொன்னாள்.




உடனே ராஜா சேவகர்களைப் பார்க்க அவர்கள் கிழவியின் குடிசையை அப்படியே அலுங்காமல் தூக்கிக் கொண்டு வந்து ராஜாவின் முன்னால் உலுப்பினார்கள். ஓலைகளிலிருந்து லட்சக்கணக்கான சொற்கள் உதிர்ந்தன.

எல்லா சொற்களையும் காடு, மேடு, வீடு என்று எல்லா இடங்களிலும் சொற்களைத் தூவினார்கள். மறுபடியும் கோட்டையூர் நாட்டு மக்களிடம் சொற்கள் குடி வந்தன.

இப்போதெல்லாம் கோட்டையூர் நாட்டில் எல்லோரும் அளவாக, அவசியம் இருந்தால் மட்டுமே பேசினார்கள்.

அப்படி யாராவது அநாவசியமாகப் பேசினால் உடனே ராஜா அவர்களிடமிருந்து சொற்களைப் பிடுங்கி விடுவார். அது தான் அவர்களுக்குத் தண்டனை. அதனால் மக்கள் பொறுப்புடன் சிக்கனமாக சொற்களைப் பயன்படுத்தினார்கள். நாடும் செழித்தது.

# 10. மறந்த சிரிப்பு

சிரிப்பூர் நாட்டு ராஜாவின் அலம்பல்களுக்கு ஒரு அளவே இல்லாமல் போய்விட்டது. அவருடைய அட்டகாசம் தாங்கமுடியாமல் கொஞ்சப்பேர் கிமெரிக்கா, கிங்கிலாந்து போன்ற நாடுகளுக்குப் போய் குடியேறி விட்டனர்.

சாதாரண மக்கள் வேறுவழியில்லாமல் ராஜாவின் கோமாளித்தனங்களைப் பொறுத்துக் கொண்டிருந்தனர். அரசவையில் ஒரு நாள் ராஜா தன்னுடைய பருத்த உடம்பைத் தூக்கிக் கொண்டு வந்து அரியணையில் உட்காரப்போன சமயத்தில் கால்கள் பின்னி கீழே விழுந்து விட்டார்.



அத்தாப்பெரிய உடம்பு ஒரு சிறு மலையைப் போல படிக்கட்டுகளில் உருண்டு கீழே விழுந்ததைப் பார்த்த அரசவையிலிருந்த முதல் மந்திரி, துணை மந்திரிகள், இணை மந்திரிகள், சேனாதிபதி, தளபதி, அரசவையிலிருந்த ஆளுங்கட்சி உறுப்பினர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள், அரசவை புலவர்கள், விதூஷகர்கள், கோமாளிகள், சேவகர்கள், சேடிப்பெண்கள், அரசவை நடவடிக்கைகளைப் பார்க்க வந்திருந்த பொது மக்கள், பொழுது போவதற்காக தேங்காய், மாங்காய், பட்டாணி சுண்டல், பொரிகடலை, நிலக்கடலை, உருளைக்கிழங்கு சிப்ஸ்,

குர் குர்ரே, லேஸ், லிட்டில் பால்ஸ், விற்பனை செய்ய வந்திருந்த வியாபாரிகள், வாங்கித் தின்பவர்கள் சிந்துகிற தின்பண்டங்களைப் பொறுக்கித் தின்ன வந்திருந்த சில நாய்கள், பூனைகள், அரண்மனை தோட்டத்திலிருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த குருவிகள், மைனாக்கள், புறாக்கள் என்று எல்லோரும் சிரித்து விட்டார்கள்.

அந்தச் சிரிப்பினால் அந்த நாடே குலுங்கியது. வீடுகள் ஆடியது. வீட்டிலிருந்த மக்கள் ஆடினர். அந்த ஆட்டத்தைப் பார்த்து ஒருவருக்கொருவர் சிரித்தனர்.

அந்தச் சிரிப்பினால் சாலையில் போய்க்கொண்டிருந்த வாகனங்கள் குதித்தன. மரங்கள் தலையாட்டி ஹா ஹா ஹா வென சிரித்தன. இத்தனை சத்தத்தில் ஏற்கனவே படிக்கட்டுகளில் உருண்டு கொண்டிருந்த ராஜா மேலும் மேலும் உருண்டு அரண்மனையின் வாசலுக்கே வந்து விட்டார். அவர் உருள உருள அரசவையின் தரை அதிர்ந்தது.

அந்த அதிர்ச்சியினால் சிரித்துக் கொண்டிருந்தவர்களும் கீழே விழுந்து உருண்டனர். உருண்டவர்கள் அப்படியே ராஜாவை நோக்கி போய்க் கொண்டிருந்தனர். அப்போது தான் அந்த அபாயத்தை உணர்ந்த சேவகர்கள் தட்டுத்தடுமாறி எழுந்து உருண்டவர்களைத் தடுத்து அணை போட்டனர். உருண்டு கொண்டிருந்தவர்களிடையே ராஜாவைத் தேடினார்கள். ராஜாவைக் காணவில்லை. அவர் தான் அரண்மனை வாசலில் கிடந்தாரே.

கடைசியில் ராஜாவை அரண்மனை வாசல் படிக்கட்டுகளில் கடைசிப்படிக்கட்டில் குப்புறக்கிடந்ததைப் பார்த்தார்கள். அவரால் அசையக் கூட முடியவில்லை. ஐம்பது சேவகர்கள் சேர்ந்து அவரைத் தூக்கிக்

கொண்டு வந்து அந்தப்புரத்தில் படுக்க வைத்தார்கள். பதினெட்டு நாட்டு மருத்துவர்களும் வந்து அவருக்கு பண்டுவம் பார்த்தார்கள்.

ஒரு மாதத்திற்குப் பிறகு அரண்மனைக்கு வந்த ராஜா ஒரு சட்டம் போட்டார். என்ன சட்டம் தெரியுமா?

இனிமேல் நாட்டில் யாரும் வாயைத்திறந்து சிரிக்கக் கூடாது. என்ன நடந்தாலும் சரி. என்ன பேசினாலும் சரி. என்ன விழுந்தாலும் சரி. என்ன எழுந்தாலும் சரி. யாரும் சிரிக்கக்கூடாது. அப்படிச் சிரிப்பவர்களுக்கு ஐம்பது கசையடிகள் தண்டனை என்று தண்டோரா போடச் சொன்னார். அரண்மனையிலிருந்த விதூஷகர்களையும், கோமாளிகளையும் நாடு கடத்த உத்தரவிட்டார். நகைச்சுவையாக எழுதுகிற எழுத்தாளர்களை சிறையில் அடைத்தார். அது மட்டுமல்லாமல் அவர்களை பத்து கோடி தடவை இனி நான் சிரிப்புக்கதை எழுத மாட்டேன் இனி நான் சிரிப்புக்கதை எழுத மாட்டேன் என்று இம்போஷிசன் எழுதச் சொன்னார்.

இந்தச் சட்டம் போட்ட பிறகு தினசரி மக்கள் கூட்டம் கூட்டமாக கசையடிகள் வாங்கினர். கசையடி கொடுக்க ஆட்கள் போதவில்லை. மேலும் கசையடி கொடுக்கும்போதே அடிக்கிற ஆட்கள் சிரித்து விட அவர்களும் கசையடி வாங்கினார்கள்.

இப்படி கசையடி வாங்கியவர்கள் இரண்டு நாட்களுக்கு எந்த வேலையும் செய்ய முடியவில்லை. விவசாயம் நடக்க வில்லை. தொழிற்சாலைகள் ஓடவில்லை. பள்ளிக்கூடங்கள் நடக்க வில்லை. கல்லூரிகள் மூடிக்கிடந்தன. வீடுகளில் சமையல் செய்ய ஆளில்லை.

எல்லோரும் ஏதோ ஒரு ஆசுபத்திரியில் கிடந்தார்கள். உடம்பு சரியாகி வந்ததும் ஏதாவது ஒரு காரணத்துக்காகச் சிரித்து விடுவார்கள்.

ஏன் முதல்மந்திரியே இரண்டு தடவை கசையடி வாங்கினார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். அதிலிருந்து முதல் மந்திரி தொடங்கி அதிகாரிகள், ஊழியர்கள், சேவகர்கள், பொதுமக்கள் என்று எல்லோரும் ராத்திரியில் சத்தமாக ரேடியோ, தொலைக்காட்சி சேனல்களை போட்டு சிரியோ சிரியென்று சிரிப்பார்கள். ரேடியோ தொலைக்காட்சி சத்தத்தில் சிரிப்புச் சத்தம் வெளியே கேட்காது.

இப்படியெல்லாம் சிரிப்பூர் மக்கள் சிரிக்க முடியாமல் சங்கடப்பட்டார்கள். நீங்களே சொல்லுங்கள். யாராவது சிரிக்காமல் இருக்க முடியுமா?

ஆனால் தொடர்ந்து வாங்கிய தண்டனையால் மக்கள் சிரிப்பை மறந்து அழத்தொடங்கினார்கள். முன்பு எதற்கெல்லாம் சிரித்தார்களோ அதற்கெல்லாம் இப்போது அழுதார்கள். வீடே அழுதது. தெருவே அழுதது. ஊரே அழுதது. நாடே அழுதது. பகலும் இரவும் அழுகைச் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.



ராஜா ஒரு நாள் அவருடைய மந்திரிகளுக்கு விருந்து வைத்தார். அந்த விருந்தில் முதல் மந்திரி வறுத்த கோழிக்குஞ்சு ஒன்றை அப்படியே விழுங்க முயற்சித்து வாயை அகலமாகத் திறந்தார். கோழிக்குஞ்சு உள்ளேயும்

போகாமல் வெளியேயும் வராமல் வாய்க்குள்ளே நின்று விட்டது. முதல்மந்திரியின் வாய் தவளையின் வாய் மாதிரி ஆகி விட்டது.



அந்த நேரம் பார்த்து ராஜா முதல்மந்திரியிடம் "எப்படி விருந்து?" என்று கேட்க, அதற்கு முதல்மந்திரி "விழ்ந்து பிழ்மாதம்" என்று சொன்னார்.

அதைக் கேட்ட ராஜா சிரிப்பு பொங்கி வர சிரித்து விட்டார். உடனே விருந்தில் கலந்து கொண்டவர்கள் "ஹேய்... ராஜா சிரித்து விட்டார் ராஜா சிரித்து விட்டார்..." என்று கத்தினார்கள்.

உடனே ராஜா சேவகர்களைக் கூப்பிட்டு, "யாராயிருந்தாலும் சட்டம் சட்டம் தான்.. நிறை வேற்றுங்கள்..." என்று சொன்னார். எல்லோரும் வேண்டாம் வேண்டாம் என்று சொன்னார்கள். ஆனால் ராஜா பிடிவாதம் பிடித்தார்.

சரி என்று சேவகர்களில் ஒருவன் ராஜாவை திருப்பி நிறுத்தி முதுகிலும் பிட்டத்திலும் ஐம்பது கசையடிகள் கொடுத்தான்.

அவ்வளவு தான் ராஜா துடித்து உடம்பெல்லாம் தடித்து உருண்டு புரண்டு விட்டார். ராஜா துடிப்பதைப் பார்த்து எல்லோருக்கும் சிரிப்பு வந்தாலும் யாரும் சிரிக்கவில்லை.

மறுநாள் ராஜா முதல்வேலையாக முதல் மந்திரியைக் கூப்பிட்டு அவருடைய சிரிப்புத் தடைச்சட்டத்தை உடனே நீக்கி விடச் சொன்னார்.

முதல் மந்திரி ராஜாவின் வீங்கிப் போன உடம்பைப் பார்த்து சிரிப்பு பொங்கி வரச் சிரித்தார்.

ராஜாவும் அந்தச் சிரிப்பில் கலந்து கொண்டார். சிரிப்பூர் நாட்டிலிருந்த மக்களும் அன்றிலிருந்து சுதந்திரமாகச் சிரித்தார்கள்.

# 11. பறவைகள் பறந்து போய் விட்டன

சேவலூர் நாடு வளம் மிக்க நாடு. அந்த நாட்டில் மலைகளும் காடுகளும் அதிகம். மழைப்பொழிவு அதிகமானதினால் ஆறுகளும், ஓடைகளும் குளங்களும் கண்மாய்களும் நீர் நிரம்பி வழிந்தன. அப்படி தண்ணீர் செழிப்பாக இருந்ததினால் விவசாயம் செழிப்பாக நடந்தது. விவசாயம் செழிப்பாக நடந்ததினால் நாட்டில் முப்போகமும் விளைந்தது.

சேவலூர் நாட்டிலிருந்து விளைபொருட்கள் சுற்றிலுமிருந்த அனைத்து நாடுகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. நாட்டில் செல்வம் கொழித்தது. மக்கள் ராஜாவைப்போல ஆடம்பரமாக இல்லாவிட்டாலும் மூன்று வேளையும் வயிறார சாப்பிட்டனர்.

சேவலூர் நாட்டில் தெருக்கள், சாலைகள், வீடுகள் எங்கும் மரங்கள் செழித்திருக்கும். எப்போதும் குளுமையாக இருக்கும். சூரியனின் ஒளி நாட்டினுள் நுழைய முடியாது. எங்கும் நிழல் கவிந்து ஆனந்தமாக இருக்கும். மக்களின் முகத்தில் எப்போதும் புன்சிரிப்பு தவழும். கோபம் என்பதே வராது. எல்லோரும் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர்.

ஒரு நாள் சேவலூர் ராஜா அரண்மனை தோட்டத்தில் இரவு உணவுக்குப் பின்னால் உலாவிக் கொண்டிருந்தார்.

அரண்மனைத்தோட்டத்தில் மருதம், புங்கை, புளி, வேம்பு, தேக்கு, மரங்களும் செடிகளும் கொடிகளும் பூக்களும் காய்களும் கனிகளும் நிறைந்து செழித்திருந்தது. குளிர்ந்த தென்றல் காற்றை அனுபவித்துக் கொண்டே நடந்து கொண்டிருந்தார் ராஜா.



அப்போது அங்கு ஓங்கி வளர்ந்திருந்த மருதமரத்திலிருந்து ஒரு பறவையின் எச்சம் ராஜாவின் தலையில் விழுந்தது. ராஜா தலையைத் தடவினார். கையில் பிசுபிசுவென்று அந்தப்பறவையின் எச்சம் ஒட்டிக் கொண்டது. அருவெறுப்பினால் ராஜாவின் முகம் கோணியது. அதோடு அவருடைய மேலாடையான தங்கச்சரிகை போட்ட உத்தரியத்திலும் கறையாகி விட்டது.

ராஜாவுக்கு கோபம் இன்னமட்டுமில்லை. அப்படி வந்தது. உடனே போய் பன்னீர் கலந்த தண்ணீரில் குளித்தார். ஆனாலும் அந்த எச்சத்தின் நாற்றம் அவரிடமிருந்து போகவில்லை என்று அவர் நினைத்தார்.

உடனே அரண்மனை சோதிடர்களை அழைத்தார். இரவில் அவருடைய உச்சந்தலையில் விழுந்த பறவையின் எச்சபலன் என்ன என்று கேட்டார்.

ஏற்கனவே அரண்மனையில் சொகுசாக ஐந்து வேளையும் தின்று கொண்டு ராஜாவுக்கு பல்லி விழும் பலன்கள், பூனை குறுக்கே போகிற பலன்கள், ஆந்தை கத்தும் பலன்கள், கழுதை கத்தும் பலன்கள், கரப்பான்பூச்சி பறக்கும் பலன்கள், கிளி கத்தும் பலன்கள் என்று எதையாவது சொல்லிக் கொண்டிருப்பார்கள். எதுவும் இல்லையென்றால் கட்டங்களைப்

போட்டு கிரகங்களின் பார்வை அது இது என்று சோதிடர்கள் பொழுதைக் கழித்து வந்தனர்.

இப்போது ராஜா கூப்பிட்டதும் ராஜாவின் தலையில் விழுந்த எச்சம் உச்சந்தலையில் விழுந்ததா? இடது பக்கமாக வழிந்ததா? இல்லை வலது பக்கமாக வழிந்ததா? அல்லது பின் தலையில் வழிந்ததா? என்று ஆராய்ச்சி செய்தனர். பின்னர் அவர்கள் எல்லோரும் ஒரே குரலில் "அரசே... ஒரு மிகப்பெரிய பஞ்சம் வரப் போகிறது... அந்தப் பஞ்சத்தினால் மனிதர்கள், மிருகங்கள், பறவைகள், பூச்சிகள், புழுக்கள், நீங்கள், நாங்கள், எல்லோரும் மிகுந்த கஷ்டப்படப் போகிறோம் என்பதையே அந்த எச்சபலன் சொல்கிறது அரசே..." என்று சொன்னார்கள்.

சேவலூர் ராஜாவின் முகம் வெளிறிப்போய் விட்டது. அவர் உடனே சோதிடர்களைப் பார்த்து, "இதற்குப் பரிகாரம் ஏதேனும் இருக்கிறதா?" என்று கேட்டார்.

அதற்கு அந்தச் சோதிடர்கள், "பறவைகள் இல்லாத நாடாக சேவலூரை மாற்ற வேண்டும் ராஜா... பறவைகள் இல்லையென்றால் எந்தப் பஞ்சமும் வராது..." என்று சொன்னார்கள்.

சோதிடத்துக்கும் அறிவியலுக்கும் தான் சம்பந்தம் கிடையாதே.

அவர்களது சொற்களை ஆராயாத அரசன் உடனே ஆணையிட்டான்.



“சேவலூர் நாட்டில் ஒரு பறவை கூட இருக்கக்கூடாது…”

சேவகர்கள் மரங்களிலிருந்து பறவைகளை விரட்டினர். அம்புகளினால் பறவைகளைக் கொன்றனர். துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தினர். ஆனாலும் பறவைகளின் எண்ணிக்கை குறைய வில்லை.

ராஜாவிடம் வந்து “அரசே… பறவைகளை விரட்ட முடியவில்லை.. எல்லாம் மரங்களில் ஒளிந்து கொள்கின்றன…” என்று சொன்னார்கள்.

உடனே ராஜா, “அப்படியா… உடனே எல்லா மரங்களையும் வெட்டித்தள்ளுங்கள்… இனி எப்படி பறவைகள் வரும்… கக்கா போகும் என்று பார்க்கிறேன்…” என்று உத்தரவிட்டார்.

அவ்வளவு தான் சேவகர்கள் நாட்டிலுள்ள மரங்களை வெட்ட ஆரம்பித்தனர்.

அதைப் பார்த்த அறிவியலறிஞர்கள் ராஜாவிடம் சென்று, “ராஜாவே உடனே மரம் வெட்டுவதை நிறுத்தச் சொல்லுங்கள்… மரங்கள் இல்லையென்றால் நாட்டில் பெரும் பஞ்சம் வந்து விடும்… ராஜாவே…” என்று மன்றாடினார்கள்.

அதைக் கேட்ட ராஜா சிரித்தார். சிரித்துக் கொண்டே, “நான் பஞ்சம் வராமலிருக்கத்தான் மரங்களை வெட்டுகிறேன்… சோதிடர்களே சொல்லி விட்டார்கள்… அதற்கு மேல் நீங்கள் என்ன?” என்று முழங்கினார்.

அறிவியலறிஞர்கள் வருத்தத்துடன் சேவலூர் நாட்டை விட்டே வெளியேறினர். ஒரு வருடத்தில் சேவலூர் நாட்டிலுள்ள மரம் செடி கொடிகள் எல்லாம் வெட்டி அழிக்கப்பட்டன.

செங்கழுகு, வல்லூறு, செம்பருந்து, கிருஷ்ணப் பருந்து, மைனா, காகம், சிட்டுக்குருவி, படை குருவி, பனங்காடை, காடைக்குருவி, கௌதாரி, கிளி, தவிட்டுக்குருவி, தூக்கணாங்குருவி, கருங் குருவி, மணிப்புறா, மாடப்புறா, தவிட்டுப்புறா, காட்டுப்புறா, வீட்டுப்புறா, மயில்புறா, கர்ணப்புறா, காட்டுக்கோழி, நீர்க்கோழி, உள்ளான் என்று எல்லாப்பறவைகளையும் கொன்றனர். வீட்டுக்கோழிகள், சேவல்களைக் கூட விட்டு வைக்க வில்லை. ஐந்து வருடங்களில் எல்லாப்பறவைகளும் அழிக்கப்பட்டன.

சேவலூர் நாட்டில் மழை குறைந்தது. வெயிலின் தாக்கத்தினால் புதிய புதிய நோய்கள் உருவாகின. குடிநீர்ப்பஞ்சம் வந்தது. வயல்கள் காய்ந்து கருகின. உணவுத்தட்டுப்பாடு வந்தது, மக்கள் பட்டினி கிடந்தனர். நாடு பாலைவனமாகி விட்டது. நாட்டில் பஞ்சம் தலை விரித்தாடியது. மக்கள் உயிர் வாழ்வதற்காகப் போராடினார்கள். ஒருவரை ஒருவர் அடித்தனர்.

அன்பில்லாத உலகமாக சேவலூர் நாடு மாறி விட்டது. பிழைப்பிற்காக மக்கள் கூட்டம் கூட்டமாக வேறு நாடுகளுக்கு சென்றனர்.

பஞ்சம் மெல்ல மெல்ல அரண்மனையை நோக்கி நகர்ந்தது. அரண்மனையில் ஏராளமான பொன்னும் பொருளும் இருந்தும் உணவில்லை.

அது வரை அந்தப்புரத்தில் குளிர்பதன அறையிலேயே இருந்த ராஜாவுக்கே ஒரு நேரம் உணவில்லை. ராஜா அரண்மனையை விட்டு வெளியே வந்தார். பார்க்கச் சகிக்கவில்லை. நாடு சுடுகாடாக இருந்தது. அப்போது தான் அறிவியலறிஞர்கள் சொன்னது ராஜாவின் ஞாபகத்துக்கு வந்தது.

உடனே சேவகர்களை அனுப்பி அந்த அறிவியல் அறிஞர்கள் எங்கிருந்தாலும் அழைத்து வரச்சொன்னார்.

சேவகர்கள் அறிவியல் அறிஞர்களை அழைக்கப்போகிறார்கள் என்று தெரிந்தவுடன் சோதிடர்கள் ராஜாவிடம் வந்து, “ராஜா இந்தப் பிரச்னைக்கு சோதிடத்தில் என்ன சொல்லியிருக்கிறதுன்னா…” என்று எல்லோரும் ஒரே குரலில் பேச ஆரம்பித்தார்கள்.

ராஜா உடனே கோபத்துடன் தன்னுடைய படைவீரர்களிடம், “ம்ம் இவர்களை நாடு கடத்துங்கள் இன்னும் பத்து வருடங்களுக்கு இவர்கள் சேவலூர் நாட்டினுள் நுழையத் தடை விதிக்கிறேன்…” என்று கட்டளையிட்டார்.

சேவலூர் நாட்டுச் சேவகர்கள் அறிவியல் அறிஞர்களைத் தேடிக் கண்டு பிடித்து கூட்டிக் கொண்டு வந்தார்கள்.



சேவலூரில் இப்போது லட்சக்கணக்கான மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. மெல்ல முகிழ்க்கும் மரக்கிளைகளில் பறவைகள் ஒவ்வொன்றாய் வந்து உட்காரத் தொடங்கியுள்ளன.

மழைமேகமும் இப்போது சேவலூர் நாட்டின் மீது உலவுகிறது. நாடு விட்டுப் போன மக்கள் மீண்டும் தங்களுடைய நாட்டுக்குத் திரும்பி வந்து கொண்டிருக்கின்றனர்.